# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னுகம், சர்வதாரி மாசி உ௩ (காந்தி ஆண்டு 80) 6-3-'49, ஞாயிறு | இதழ் 31



வெளிவந்துவிட்டது — 2-ம் பதிப்பு

**மொழிப் பயிற்சி**

[3-ம் புத்தகம்]

முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி

4-ம், 5-ம் வகுப்புகளுக்கேற்ற இலக்கணப் பகுதிகள் முழுவதும் இந்நூல்மூலம் கற்பிக்கப்பட வசதியுண்டு. பெயராயும் வினையாயும் வருஞ் சொற்கள், ஒரு பொருட் பல சொல், சொற் புணர்ச்சி, எழுவாய் பயனிலை வேற்றுமை, செய்வினை செயப்பாட்டு வினை, முதலிய வினை வகைகளும், பலவித பயிற்சிகளும் இதில் அடங்கியிருக்கின்றன.

விலை ரூபா 1-00 தபாற்செலவு வேறு

சுன்னுகம் : தனலக்குமி புத்தகசாலை


# மாதர்குலத்தின் திலகம்

## சரோஜினிதேவி பிரிவு

**கனவுபோலிருக்கின்றது. உலகம் போற்றிய உன்னதக் கவியரசி இனி இல்லை. பெண்குலத்தின் உத்தம திலகமெனத் திகழ்ந்த சரோஜினிதேவி மறைந்து விட்டார்.**

**பாரத நாட்டின் வானம்பாடி, வான வெளியிற் சிறகடித்துப் பறந்துவிட்டது. எண்ணற்ற மக்கள் தங்கள் அன்னையை இழந்துவிட்டனர்.**

இந்தியாவின் சுதந்திரப்போராட்டங்களிற் படைத்தலைவியாக விளங்கிப் பெண்ணினத்தின் கௌரவத்தை உயர்த்தியவரும், இந்தியாவின் முதலாவது பெண் தேசாதிபதியாகப் பதவி, யேற்றுப் பணியாற்றியவருமான ஸ்ரீமதி சரோஜினிதேவி இம்மாதம் 2-ந் திகதி அதிகாலை சுமார் 3½ மணியளவில் மாரடைப்பால் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 70. கடந்த சில தினங்களாகத் தலை வலியாலும், இரத்தக் கொதிப்பினாலும் அவர் படுக்கையுற்றிருந்தார்.

வீராங்கனையின் பிரிவுச் செய்தியைக் கேட்டு இந்திய மக்கள் கலங்கினர். உலகமே துக்கத்தில் ஆழ்ந்துவிட்டது.

**மகள் அருகில் இல்லை**

ஸ்ரீமதி சரோஜனிதேவி இவ்வுலகை விட்டுப் பிரிந்த சமயத்தில், அவரருகே உறவினர் எவரும் இருக்கவில்லை. கவியரசியின் குமாரத்தியும், அவருக்கு ஆகவேண்டிய பணிகளையெல்லாம் செய்து வந்தவருமான ஸ்ரீமதி பதமஜா நாயுடு, அலகபாத்திலுள்ள கமலாநேரு வைத்தியசாலையில் அமைக்கப்பெற்ற பேகம் அஸாத் என்ற பகுதியைத் திறந்து வைப்பதற்காக அங்கு சென்றுவிட்டார்.

சரோஜினிதேவியின் கணவர் மேஜர் எம். ஜி. நாயுடுவுக்குத் தந்திமூலம் செய்தி அனுப்பப்பெற்றது.

தேவியார் சென்ற செவ்வாய்க்கிழமை இரவு 11½ மணிக்குத் துயிலச் சென்றார். அதிகாலை 3 மணிவரை நன்ருகப் படுத்துறங்கினர். பின்னர் பலமான இருமல் உண்டாயிற்று. 3-30 மணிக்கு அவர் காலமானார். இம்மாதம் முதலாந்திகதி மாலை அவர் தாங்கமுடியாத தலைவலியால் அவஸ்தைப்பட்டார். இருதயமும் பலவீனமுற்றிருந்தது. தூக்கம் உண்டாவதற்காக 11 மணிக்கு அவருக்கு ஊசி பாய்ச்சப்பட்டது.

●

ஐக்கிய மாகாணத்துத் தேசாதிபதியான ஸ்ரீமதி சரோஜினிநாயுடு அவர்களின் மரணத் தறுவாயின்போது தாதி ஒருவர் மட்டும் இருந்தார். தாதியைச் சிறிதுநேரம் பாடும்படி அவர் கேட்டார். தாதியும் சில நல்ல பாடல்களைப் பாடினர்.

**சரி நிகர் சமானம்**

இந்தியத் தேசியக் காங்கிரஸுக்குத் தலைமை தாங்கும் கௌரவமும் இவருக்குக்கிடைத்தது. இவருக்குமுன் இதுவரை எப்பெண்மணியும் அப்பதவியை வகித்ததில்லை. எனவே, அவர் ஒருவரே அக்கௌரவத்துக்குப் பாத்திரராயினர். தேவியாருக்குத் தேசியப்பற்று ஆரம்பித்தகாலத்திலிருந்தே அவர் சுதந்திரப் போராட்டத்தில் ஆண்களுடன் சரி நிகர் சமானமாகப் பங்கெடுத்துக்கொண்டார். காந்திஜியின் நெருங்கிய நண்பராவார். அத்துடன் காங்கிரஸ் காரிய நிர்வாகசபையின் பாரிய தூண்களில் ஒருவராகவும் பல வருடகாலம் பணியாற்றியுள்ளார்.

**மாபெருந் தலைவி**

மறைந்த மாபெருந் தலைவியும் தேசாதிபதியுமான சரோஜினியின் பெருமைபற்றிஇந்திய அரசாங்கத்தின்விசேஷ அறிக்கையிற் குறிப்பிடப்பட்டிருப்பதாவது: இந்திய தேசத்தின் அரசியல், சமூகவாழ்க்கையில் ஸ்ரீமதி சரோஜினிதேவி ஆற்றியுள்ள மகத்தான சேவைகள் சொல்லுந்தரமன்று. அவர் ஒப்பிலா நா வன்மை படைத்தவர். கவியரசி; சாதாரணமாகக் காணமுடியாத கவர்ச்சி நிறைந்தவர். நகைச் சுவை இரசிகர்மட்டுமன்றி அச்சுவையுணர்ச்சியும் மிக்கவர். இலக்கியத்துறையில் இணையில்லாப் பற்றுள்ளவர் ...... விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் நின்று காந்திஜியின் இலட்சியம் ஈடேறும் புனித கைங்கரியத்தை மேற்கொண்டார். அதற்காகத் தமது அருமை பெருமைகளை அர்ப்பணஞ்செய்தார்...... 1942-ம் வருடத்தில் பெரிய அரசியல் இயக்கத்தில் உடல்நிலை மோசமாக இருந்த சரோஜினி கைதியானவர்களில் முக்கியமாக இருந்த ஒருவர்......அவருக்கு உன்னத பதவிகளை அளித்தபோது பெண் ஒருவருக்குக் காட்டப்படும் சலுகை அவருக்குக் காட்டப்படவில்லை. டில்லியில் ஆசிய மகாநாடு கூடியபோது மிருந்த தகுதிவாய்ந்த தேவியார் அதன் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இது சாலவும் பொருத்தமானதேயாகும். தேசாதிபதியாக அவர் நியமிக்கப்பட்டபோதும் அவர் தாராள மனப்பான்மையுடன் நடந்து சகலரின் மதிப்பையும் பாராட்டுகளையும் பெற்ருர்.

### 'அரசியல் ஞானங் கனிந்த மாதரசி'

அந்தோ! விதியோ நந்தோ மதுவோ
நொந்து புலம்பி நோன்மை யகன்று
சிந்தா குலஞ்செய வந்ததே காலம்;
அன்னையை முன்னை யிழந்தனந் தேசத்
தந்தையை யுலக முந்துறு சோதியைப்
பின்னை யிழந்தோம் பேதுற லுற்ரேம்;
அன்னை யப்பரை யிழந்தோர்க் கரசி
யாது மின்னல் வரா து புரக்கு
மென்றே யிருந்தோம் ஸரோஜிநி தேவி!
மங்கையர்க் கரசி! வரகவி யரசி!
தேச சேவையிற் பழுத்தபே ரரசி!
நகைச்சுவை யகைத்த நயவுரை அரசி!
அரசியல் ஞானங் கனிந்தமா தரசி!
அன்பொ டருளு மறிவுந் தியாகமும்
துன்பு துடைக்குந் தொடுபடை யாக்கொண்
டறப்போ ராற்றிய அண்ணலை அடையும்
தலையளி யாலோ தணந்தனை யெம்மைப்
பாரத தேவி தருந்தவப் புதல்வி!
மறைந்தனை யென்று மறவோ முனையே.

— தி. சதாசிவஐயர்

# வாய்ப்பூட்டுச் சட்டம்!

## இடதுசாரிகளுக்குச் சாட்டை

4-3-49

**பிரதிநிதிகள் சபையில் இவ்வாரம் முக்கியமான விஷயங்கள் நடைபெற்றன. அரசாங்க ஊழியர்களின் வாய்ப்பூட்டுச் சட்டத் (208B) தை ஒழித்துக் கட்டுவதற்குச் சில பிரதிநிதிகள் பகீரதப் பிரயத்தனங்கள் செய்தனர். ஆனல் யாவும் படுதோல்வியாயின.**

குறித்த சட்டத்தை எதிர்க் கட்சியினர் தாறுமாருகக் கண்டித்தனர். பழைய மந்திரி சுந்தரலிங்கம் அவர்களும், அரசாங்க ஊழியர்களை வடிகட்டிய அடிமைகளாக்கும் அச்சட்டத்தைப் பற்றிக்காரசாரமாகப்பேசினர்.

யூ. என். பி. அரசாங்கம் ஹிட்லர் ஆட்சியை இலங்கையிலே திணித்து வருகின்றதென்பது எதிர்க் கட்சியினரின் இடி முழக்கமாக இருந்தது.

இத்தனைக்கும் அரசாங்கக் கட்சி அசையவில்லை. நிதி மந்திரி ஜயவர்த்தன 208B சட்டம் நீதியின்பாற்பட்டதென்றவகையில தாம் செய்து முடித்த கைங்கரியத்தின மகத்துவத்தை விளக்கிக் காட்டினர். அவருக்குப் பக்க பலமாக நின்று விவசாய மந்திரி டட்லி சேனநாயகா பல்லவி பாடினர்!


சபைத் தலைவர்மீது நம்பிக்கையில்லையென்ற ஸ்ரீ சுந்தரலிங்கத்தின் தீர்மானம் புஸ்வாணமாகிவிடக் கூடுமெனச் சென்றவாரம் எழுதிய கடிதத்திற்குறிப்பிட்டிருந்தேன். சொல்லி வைத்ததுபோலவே அது நடந்திருக்கின்றது. ஸ்ரீ சுந்தரலிங்கத்தின் தீர்மானததை ஸ்ரீ செல்வநாயகம் ஒருவரே ஆதரித்திருந்தார். எதிர்க்கட்சியினர் சிலர் அந்தநேரம் சபையை விட்டு வெளியேறினர்.

மந்திரி பொன்னம்பலம் அப்பிரேரணை மடைத்தனமானதென உறுமினர். வட்டுக்கோட்டைப் பிரதிநிதி ஸ்ரீ கே. கனகரத்தினம் மந்திரி பொன்னம்பலத்தைத் தட்டிக்கொடுத்து யூ. என். பி. கட்சிக்கு அரண் சமைத்தார்!

தோழர் கெனமன் ஸ்ரீ சுந்தரலிங்கத்தின் தீர்மானம் அரசியற் சூழ்ச்சி நிறைந்ததொன்றெனத் தெரிவித்தார். இப்படியாகக் கொம்யூனிஸ்ட் ஒருவர் பேசியதில் ஏதோ சூழ்ச்சியிருப்பதாகச் சபை கலைந்தபோது ஒரு சிலர் பேசிய வார்த்தைகளும் எனது காதுகளுக்கு எட்டின.

**இராணுவ மசோதா**

வியாழக்கிழமை சபை கூடியபோது இராணுவ மசோதா இரண்டாவது முறையாக நிறைவேறியது. பிரதமரே இதைச் சமர்ப்பித்தார். இம்மசோதாவுக்கு 45 பேர் சாதகமாகவும் 20 பேர் பாதகமாகவும் வாக்களித்தனர். கொம்யூனிஸ்டுகளின் அக்கிரமங்கள் இலங்கையிலும் தலையிடக்கூடுமென அரசாங்கம் பயப்படுகின்றதென்பது சில அரசாங்கக் கட்சியினரின் பேச்சுக்களிலிருந்து தெரியவருகின்றது(?)




இவ்வாரத்தின்போது ஸ்ரீ கீர்த்திரத்ன நவமான ஒரு நியாயத்தைக் கூறினர். இதைப் படித்து உலகமே சிரித்தாலும் அது ஆச்சரியமாகாது. ஸ்ரீ கீர்த்திரத்ன கூறியதாவது. "ஜனநாயகத்தின் பெயரைச் சொல்லிச் சபைக்குள் நுழைந்தவர்கள் சிலர் எதிர்க்கட்சியினராக இன்று விளங்குகின்றனர். இவர்களைச் சபையினின்றும் வெளியேற்றுவதற்கான ஒரு சட்டத்தை ஏற்படுத்தும்படி நான் எங்கள் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஜனநாயகத்தையே உலைவைத்து விடுவதற்கு முனைந்துநிற்கும் இவர்கள் எதற்காகச் சபையில் இருக்கவேண்டுமோ, நான் அறியேன்."

இலங்கையின் பாதுகாப்புக்கு, இராணுவப் படையொன்று அத்தியாவசியமென்பது பிரதமரின் கட்சி. பக்கத்திலுள்ள நாடுகளுடன் சந்தோஷமாக வாழ்வதே இலங்கையின் நோக்கமெனவும் பிரதம மந்திரி தெரிவித்தார்.

தொழிலாளர் இயக்கத்தை நசுக்கும் ஆயுதமாகவே குறித்த இராணுவ மசோதா அமையுமென்பது தோழர் கெனமன் அவர்களின் அபிப்பிராயமாகும். டொக்டர் என். எம். பெரேரா அவர்களும் மசோதாவைப் பலமாகக் கண்டித்தார். ஸ்ரீ சுந்தரலிங்கம் நிதானமாகப் பேசிச் சில அம்சங்களைப் பாராட்டினர். சிலவற்றைக் கண்டித்தார்.

**ஸ்ரீ ஜீ. ஜீ. வேட்டு**

வெள்ளிக்கிழமை சபை கூடியபோது மீன்பிடி ஆராய்ச்சிப்பகுதி மந்திரி பொன்னம்பலம் அவர்களின் தொழிற்பெருக்க மசோதா (மசோதா என்பது முடிவுக்கு வரும் சட்டம்) இரண்டாவது முறையாக விவாதிக்கப் பட்டது. இது சம்பந்தமாக இடது கட்சியினர் குறித்த மசோதாவைப் பொதுவாகக் கண்டித்தனர். இதுதான் தருணம் எனப் பார்த்து மந்திரி பொன்னம்பலம் இடதுசாரியினரைப் போதும்போதுமெனப் போட்டுப் பிடித்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊ ..............ர்

# வ த ந் தி



● கொண்டோடி ●

● கொழும்புப் பிரதம நீதிபதி மேர்வின் ஜோசெப் இங்கிலாந்திற்குச் சென்றிருந்தாராம்.

☼ ஒரு காட்டிற்குள் நுழைந்தாராம்.

☼ பொது இடந்தான் அதுவென நினைத்தாராம்.

☼ கையைவைத்து ஒரு சிறு மரத்தைக் கிளப்பினாராம்.

☼ இதன் காரணமாக 2 பவுண் குற்றம் கொடுக்கும்படி கட்டளை வெளிவந்ததாம்.

☼ இதற்கெதிராக 'அப்பீல்' செய்திருக்கிறாராம்.

☼ இப்பொழுது இலங்கை திரும்பி வந்திருக்கிறாராம்.

☼ சட்டப்பரிபாலன சபையார் நீதிபதி வேலையினின்றும் தற்சமயம் நிறுத்தியிருக்கிறார்களாம்.

☼ நீதிபதிக்கு வளங்கிய ஸ்ரீ லங்காவின் நீதிமுறை எப்படியிருக்கிறதாம்.

☼ நீதி தவறாது நடப்பதுவே நீதிபதியின் வேலையாம்.

● ஒருவருக்கு நீதியாயிருப்பது இன்னொருவருக்கு அநீதியாக விருக்குமாம்.

☼ ஜிஜியிபை யாழ்ப்பாண நகர சபையார் வரவேற்றனராம்.

☼ திருவாளர்கள் ஆரார் நல்லையாவும் சிப் பொன்னம்பலமும் போகவில்லையாம்.

☼ எம் புறாடியும் பீக் காசிப் பிள்ளையும் போகவில்லையாம்.

☼ எஸ்ஸெம் அப்துல்காதரும், ஜேசெபஸ்தியாம்பிள்ளையும் டிஜேம்ஸூம் போகவில்லையாம்.

☼ இது பெரும் அநீதியென்று சிலர் பேசுகிறார்களாம்.

☼ இரு வெள்ளைக் குதிரைகள் பூட்டி ஒரு வண்டியில்தான் ஜீஜீபீ வந்தாராம்.

☼ தனது டைய குழந்தையின் சுகவீனம் காரணமாகத்தான் அவர் ஒரு மாதகாலமாக யாழ்ப்பாணம் வரவில்லையாம்.

☼ இதுவும் அநீதியென்றுதான் சிலர் சொல்கிறார்களாம்.

☼ சில பேர்களில் தனக்குப் பிடிக்கவில்லையாம்.

☼ இந்த வரவேற்பில் அதைப் பற்றிப் பேசக்கூடாதாம்.

☼ வேறோரிடத்தில் பார்த்துக் கொள்ளுவேன் என்றாராம்.

☼ ஜீஜீபீ பெரிய கெட்டிக்காரனும்.

● இலஙகையிற் கெட்டிக்காரர் இருக்கும் பொழுது நமக்குப் பயமில்லையாம்.

☼ இலங்கை வானொலி தமிழ்க் கலை மன்றத்தின் சார்பில் ஒரு விழா நடைபெற்றதாம்.

☼ இதற்கு முத்தமிழ்விழாவென்றுபெயர்சூட்டினார்களாம்.

☼ இதற்கும் அம்சங்கள் பல இருக்கின்றனவாம்.

☼ கீழைத்தேசநடனம். வாய்ப்பாட்டு, வாத்திய இசை, சொற்பொழிவும் அம்சங்களிற் சிலவாம்.

● அம்சங்கள் வர வர மாறி வருகின்றனவாம்.

☼ புதிய அரிசிக் கூப்பன்கள் விநியோகிக்கப்படுமாம்.

☼ வீட்டுக்குவீடுசென்றுகணக்கெடுக்கப்பட மாட்டாதாம்.

☼ தேநீர், சுருட்டு, வெற்றிலை பாக்குச் செலவு இல்லையென்று பலர் சந்தோஷப்படுகிறார்களாம்.

☼ கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து ஒரு பத்திரம் பெற வேண்டுமாம்.

☼ அதில் விபரங்களை எழுதிக் கொடுக்கவேண்டுமாம்.

☼ நமது அரசாங்கமும், இந்த அரிசிக்கட்டுப்பாடும் நீடித்து இருக்கவேண்டுமாம்.

● 5-30 மணி தொடக்கம் 9 மணிவரையும் களனியில் சனங்கள் நீடித்துத்தான் நின்றனராம்.

☼ 'சினிமா'ப்படம் பார்ப்பதற்குத் தான் நின்றனராம்.

☼ வைத்தியப் பகுதி 'வான்' ஒன்று வந்து படம் காட்டுவார்களென்ற பேச்சாம்.

☼ வைத்தியப்பகுதி 'வான்' வரவில்லையாம்.

☼ வைத்தியப்பகுதி யென்றாலே ஆபத்துத்தானும்.

● கண்டியிலும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறதாம்.

☼ வரட்சி காரணமாக தண்ணீர்பஞ்சம் கண்டியில் ஏற்பட்டிருக்கிறதாம்.

☼ இதனால் தண்ணீர்க்கட்டுப்பாடு பண்ணுகிறார்களாம்.

● கட்டுப்பாட்டினின்றும் தவறினும் பெரிய ஆபத்துத்தானும்.

☼ இலங்கையின் நிலைமை மகா மோசமாய் விடுமென்று எண்ண இடமுண்டாம்.

☼ காரணம் அரிசிப்பஞ்சந்தானும்.

☼ வயிற்றுக்கட்டுப்பாடும் எப்போது வரும் என்று தெரியாதாம்.

● கட்டுப்பாடுகள் நீங்கினால்தான் மனிதன் சுகமாயிருக்கலாமாம்.

☼ உலகம் படுகிற பாட்டில் இலங்கையும் பெரும் பாடு படுகிறதாம்.

☼ கல்விப் பகுதியும் பெரும் பாடுபடுகின்றதாம்.

☼ உதவேசம் போடுவதிலும் கல்விப் பகுதிக்கும் ஒரு தனி மதிப்பாம்.

☼ தற்காலீக வித்தியாதிபதி டி. சில்வா கல்விப்பகுதியிலிருந்து ஓய்வெடுத்துக் கொள்வாராம.

☼ அப்போது இன்னுமொரு வித்தியாதிபதியை எப்படியாவது எடுக்கவேண்டுமாம்.

☼ வெளி நாட்டிலிருந்தே ஆள் வருவாராம.

☼ உள்ளூர்ச் சரக்கு வெளியே போனால் வெளியூர்ச் சரக்காவது உள்ளூருக்கு வரத்தானே வேண்டுமாம.

● சேர் ஜோன் சார்ஜனட் இப்போது சரக்குக் கொண்டு வந்திருக்கின்றாராம்

☼ இவரும் ஒரு கல்வி நிபுணராம்.

☼ பிரித்தானிய கலாச்சார ஸ்தாபனத்தின் கிளையொன்றை ஸ்தாபிக்கப் போகின்றாராம்.

☼ இதற்காகக் கல்வி மந்திரி யாரையும் காண்பாராம்.

☼ ஆனால் கல்வி சம்பந்தமாக யோசனை கூற இயலாது முடியாதாம்.


சிறந்தபலனுக்கு

## C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும்போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

## C. C. C.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி
லிமிற்றெட்

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றியவிபரங்களுக்கு உடனே எழுதவும்.

The
**Colombo Commercial Company**
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

(3622)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி பயிற்றல் — II

# அறிஞர்கள் கொள்கை

நம் வாழ்நாளில் நாம் பெற்றுக்கொள்ளும் வித்தையின் இயல்பானது கல்வி பயிற்றலில் தங்கியுள்ளது. கல்வி பயிற்றும்போது எழும் பல்வேறு பிரச்னைகளாகிய— ஏன்? என்ன? எப்படி?—என்பனவற்றை இலேசில் விடுவிப்பதே அந்த இயல்பு. வாழ்க்கையில் கல்வி பயிற்றி அனுபவப்பட்ட ஓர் ஆசிரியர், பரம்பரையாக வந்த போதனு முறையைத் தம் அனுபவத்திற்கிணைய மாற்றியமைத்தல் வேண்டும் என்பார் ஆனால், புதிய போதனு முறைகளைப் புகுத்தவந்த ஞானிகள், தம் முறைப்படி சாதனையை அமைத்துக்கொண்டால், அது கூடிய பயனைக் கொடுக்கும் என்று வாதாடுகின்றார்கள். வித்தையின் உலகில் இவ்விரண்டு எதிரிடைகளும் பரக்கக் காணப்படுகின்றன.

உலகில் உண்மை ஒளியினைத் தேடுபவர் தத்துவ ஞானியர், என்கின்றார் சோக்கிறற்றீஸ். இவ்வொளி மனிதனோடு சம்பந்தப்பட்டது. மனிதன் சலனப் பொருட்களுள் ஒருவன். மனிதனே தன் உள்ளொளியை ஆராய முயலுகின்றான். ஆதலின், இவனுடைய அறிவும் இயங்கியல் அறிவேயாகும். அறிவு ஒருவனுடைய வாழ்க்கை முறையைத் திருத்தி அமைப்பதாக இருத்தல் வேண்டும். ஒருவர் தமமுடைய அறிவின்படியே தம் வாழ்க்கையையும் அமைத்துக் கொள்ளுகின்றார். மிகுந்த அறிவுக்குறைவு உடையவனைக் குறிக்குமிடத்தும் இவ்விதி, உண்மையாகவே இருக்கின்றது.

ஆழ்ந்த அறிவில் உறைந்த பற்று உளளவர்களே ஆசிரியர் ஆகின்றனர். ஆதலினுலேயே, கல்வியை இயங்கியல தத்துவம் என்று கூறுதல வேண்டும். ஆசிரிய இலக்கணம் உடையோருக்கே இவ்விதி அமையும், என்பதையும் ஞாபகப்படுத்தி விடுகின்றேன்.

இனி, இவ்வாசிரியன்மார் பிள்ளையின் அறிவை விருத்தி செய்யக்கூடும்; ஆன்மாவை ஓரளவிற்கு விருத்தி செய்யவும் கூடும். உடலையும் விருத்தி செய்யக்கூடும். இவ்விருத்தி அதற்கேற்ற வழிகளைக்காட்டி வைப்பதால் உண்டாவது. இவ்வழிகள் ஆசிரியராலும் அமையும்; சூழலாலும் அமையும். ஆனால், விருத்தியை விரைவுப்படுத்தாது இயற்கையாகவே வளரவிடுதல் வேண்டும் என்று மக்நீல், தாகூர் போன்ற அறிவாளிகள் கூறுகின்றார்கள்.

மனிதன் என்னும் பொருள் தனித்து நிற்கும் தகைமை அற்றது. அது சமூகத்தோடு ஒன்றுபட்டது. ஆதலின் மனிதனைச் சமூகத்தோடு சம்பந்தப்படுத்திக் கற்றலும் கற்பித்தலும் வேண்டும்.

பிளேற்றே—என்பார், மனிதனை அவனுக்குரிய அரசாங்கத்திற்காக என கற்பித்தார். அரசியல், சட்டம், போர் முறை, சிலம்பம், இசை, மறை என்பன அவர் ஊன்றி உரைத்தவை. தொழிற் கல்வியும் ஏற்றவிடத்து நன்றாகும். தத்துவம் 30 வயதினின் அதற்குரிய ஒரு சிலருக்கே கற்பித்தல் ஆகும். ஆறு வயதின்பின் ஆண் பெண்ணைப் பிரித்துக் கற்பிக்கல் நன்றென்றார். குவின்ரிலியன் என்பார் வல்ல பேச்சாளரை ஆக்கவே கல்வி வேண்டப்படுமென்றார். இதனையே இலக்காகக்கொண்டு, உடல், உள்ளம், இரண்டும் விருத்தியடைய வேண்டும் என்று கூறினார். இலக்கணமும் பாஷை

— அ. வி. ம. —

மும் கிரேக்கமும் இலத்தீனும் முதியாருக்குமே முதன் முதல் ஊட்டிவிடல் வேண்டும் என்று விட்டார், இளையோருக்கும் பயன்படும் ஆதலின். எலியற் என்பார்— முதன் முதலில் சமூகத்தில் முதியாரைக் கற்பிக்கல் வேண்டும்; இன்றேல் பிள்ளைகள் பிழைப் போவார்கள் என்றுகூறி அவர்களுக்கே தத்துவம், பூமிசாத்திரம், இசை முதலியன கற்பித்தார்.

உலோயலா என்பார்—ஆசிரியருள் சிறந்தவர். அவர் சொல்லாதது ஒன்றும் இல்லை. கல்வியும், முறையும், பிள்ளையும் எல்லாம் நுணுக்கமாக ஆராய்ந்து கூறியுள்ளார்— பரீட்சித்தலும் காட்டியுள்ளார். சமய அறிவு, தருக்கம், குழூஉமுறை உபன்னியாசம், விந்தி வாழ்க்கை, வகுப்பேற்றம் முதியார் வதப்பு—ஒழுக்கம், பழக்கம் என்று எல்லாம் கவனித்து மனிதனை விருத்தி செய்யும் வகையைக் காட்டியுள்ளார். கத்தோலிக்க பாடசாலைகளுள் இவருடைய முறை பெருமபாலும் இன்னும் கையாளப்பட்டு வருகின்றது.

கொமினியஸ் என்பார்— மனுப்பிறவி சகலதிற்கும் கல்வி ஊட்டல் வேண்டும் என்றுகூறி—பரிசுத்தமான பெயர்வழிகளாக எல்லோரும் மாறவேண்டி அறிவை ஊட்டுகின்றார். யாவரும் வாழ்க்கைக்கு ஆயத்தமாகின்றனர். அறிவு முதலறிவாக அனுபவத்தால் வந்து சேரவும் பிறமொழிக்கலை தய்மொழியின் வழியே வந்து சேரவும்வேண்டுமென்று வாதித்தவர் இவர்.

மில்ரனும்:—கல்வி தனிப்பட்ட ஒருவனுக்கன்றி, தேசத்துக்கு உரியதென்று கூறிக் கூட்டுறவு முறையையும் போற்றிபவர். நேர்மை, பெருமை, கூர்மை என்பன அரசியலிலும் பிறவற்றிலும் தோன்றக் கல்வியை மாற்ற முயன்றவர். பல துறையிலும் சென்று கலைகளை ஊட்டியும் அனுபவம் பெற்றவர்.

லொக் என்பார், பெற்றாரின் பொறுப்பினையே மிகவும் ஊன்றிக் கூறுகின்றார். அவர்களின் கல்வியும் நடத்தையுமே பிள்ளையின் வாழ்க்கையிலும் வெளிக்காட்டும். ஆகவின், அவர்கள் அறிவாளிகளாதற்குக் கற்றல் வேண்டும், என்பார்.

உறுசோ என்னும் அறிஞர்—இயல்பூக்கமும் மெய்ப்பாடும், நாட்டமும், ஆற்றலும் விருத்தியாகப் பன்னிரண்டு வயது வரைக்கும் அறிவு ஆக்கம் கருதிய முறைகளைக் கையாளுகின்றார். அதன் பின்பே பள்ளிக்கூடப் பாடங்கள் எடுக்கப்படுகின்றன. உபகதைகள் 13, 14 வயதிலேயே பயிற்றப்படுகின்றன.

பெஸ்ரலோசி—இவர் தமக்குப் பின்வந்த கல்வி வல்லார் பலரைத் தம் கொள்கையை ஆதரிக்கும்படி செய்தவர். இயற்கையோடு சம்பந்தமாகவே கல்வியை ஊட்டி, ஒவ்வொரு வார முடிவிலும் அவ்வார வேலைகளைத் திருப்பி ஆராய்ந்து வழுக்களுண்டேல் அவற்றையும் திருத்தி நடக்கச் செய்தவர் இவர்.

ஹேபாட்:—என்பார் இவருக்குப் பின் தோன்றியவர். இவர் குணம் நடையே கல்வியறிவிலும் கூடியதென்று கூறுவர். அரசியல், விளக்கம், பயிற்சி இம்மூன்றுமே கல்வியிடைச் சிறந்தனவாக இவர் கொள்வர்.

விறீபெல்:—பாலர் களரி முறையும் விளையாட்டுமூலம் கல்வியும் அபிநயமும் இவரே முதன் முதல் பாடசாலையுள் புகுத்தியவர். எல்லாக் கலையும், பாட்டுக்களின் மூலம் அபிநயத்துடன் ஊட்டப்படலாம் என்பது இவருடைய கொள்கை. குழந்தையானவன் வளர்ந்தபின் தொழில் மூலம் கல்வி கற்க உபாயங்கள் தேடிக் காட்டியுள்ளார்.

மொன்ரசூறி:—அம்மையார் முறையும் இப்படியே அமையும்—புலன் வழியாகவும் விளையாட்டுப் பொருள் வழியாகவும் மிக இளம்வயதில் குழந்தையின் கல்வி நிகழும். சுயாதீன முறையே இவர் கையாளுவது. குழந்தை இயல்பாகவே தான் விரும்பியபடி உபகரணங்களைக் கொண்டு தன் அறிவை விருத்தி செய்து கொள்ளுகிறான். ஆசிரியரும் சூழலும் அவனுக்கு உதவியாக வருவன.

இறசெல்:—என்பார் கல்வியை அணியாகக் கொள்வதனிலும் உபயோகமானதாகக் கருதல் நன்று என்றார். பிள்ளைகளின் ஊக்கமும நாட்டமும் அவர்களுடைய பழக்கத்தை ஆக்குவன. நடை, உள்ளேயிருந்து தூண்டப்படுதலால் நிகழும். வெளியே எவ்வகைத் தூண்டுதலும் அதற்கு உதவாது. பயத்தைச் சிறுவரிடம் எவ்வழியாலும் உண்டுபண்ணல் கூடாது. விருத்தி சுயமாகவே வளரல் வேண்டும். — தொடரும்

---

# அன்புருவானவன்

— மு. கோ. —

பல்லவி

அன்புருவானவனே— தூய

அனுபல்லவி

இன்ப நிலையிலும் ஈர மனதிலும்
துன்ப நிறைவிலும் தொண்டர் செயலிலும் .. அன்

சரணம்

கலையின் அழகிலும் காதல் உணர்விலும்
சிலையின் உருவிலும் சேர்த்த மதியிலும்
நிலைத்த அரசிலும் நீண்ட பொருளிலும்
கலகப் புரட்சிக் கனலின் இடையிலும் .. அன்

---

# சிரிக்க வைக்கும் மகான்

நகைச்சுவை யரசு என் எஸ். கிருஷ்ணன் இம்மாதம் 11-ந்தேதி இலங்கைக்கு விஜயம் செய்கின்றார். தமிழ்ப் பெரியார்கள் * என்ற நூலின் ஆசிரியரான வ. ரா. அவர்கள் ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணனைப்பற்றி எழுதும்போது அவர் 'தமிழ் மக்களைச் சிரிக்கவைக்கும் மகான்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஹாஸ்யத்திலே, எந்த ரகம் மிகவும் உயர்ந்தது? பத்துப் பேர்கள் கூடியிருக்கிற இடத்தில் எல்லோரும் சிரிக்க வேண்டும். அப்படி சமுதாயமாக எல்லோரும் சிரிக்காமல், ஓரிரண்டு பேர்கள் தலை குனிந்துகொண்டு, அவமானம் அடைந்தவர்களைப் போல இருக்கநேரின், அந்த விகடம் உயர்ந்தரகத்தைச் சேர்ந்ததல்ல.

தன்னைத்தானே நொந்து கொள்ளுவது மாதிரி சொல்லி, எல்லோரையும் கலகலவென்று சிரிக்கச் சொல்வதுதான் உய்ர்ந்த ரகமான விகடமாகும். கிருஷ்ணன் பிறரைக் கேலி செய்யும் விதமே விநோதமாயிருக்கிறது. யாரை அவர் கேலி செய்து, கிண்டல் பண்ணுகிறாரோ, அவரும் சேர்ந்து சிரிக்கும்படியான விதத்தில், கிருஷ்ணன் கேலி செய்கிறார்.

கிருஷ்ணன் பிறருடைய உள்ளத்தைக் குத்திப்பிளக்கிறதில்லை. அவர் பிறருடைய உள்ளத்தை விரியச் செய்கிறார்; அதை விளையாட்டுப்பொம்மையாக அடித்து விடுகிறார்.

நான் சிரிக்கமாட்டேன் என்பதுபோல வாயைக் கெட்டி

— வ. ரா. —

யாக மூடிக்கொண்டிருப்பவர்களையும் கோட்டை வாசல் திறந்ததுபோல, வாயைத் திறந்து பார்த்துக் கொண்டிருக்கும்படியாக கிருஷ்ணன் செய்து விடுகிறார்.

வாசன் நடத்திவரும் பத்திரிகை ஆனந்த விகடன். இதே ஆனந்தவிகடன் என்ற பெயர், கிருஷ்ணனுக்கு மிகவும் பொருத்தமாயுள்ளது தான். இந்த இரண்டு விகடர்களும் தமிழ் நாட்டின் தனிப் பிறவிகளாகும். கிருஷ்ணன் இல்லாத சினிமாப்படம் ஓடாது என்ற பயத்தை, கிருஷ்ணன் எப்படியோ படமுதலாளிகளின் மனதில் உண்டாக்கிவிட்டாரே! இந்தமாதிரி, இதற்குமுன் யார் செய்திருக்கிறார்? யாரால் செய்ய முடிந்தது?

இங்கிலீஷ் படித்துவிட்டு, நாகரிகத் தூண்கள் என்று தங்களை எண்ணிக்கொண்டிருப்பவர்களில பலர், என்னிடம் கிருஷ்ணனைப்பற்றி, வாதாடியிருக்கிறார்கள்.

சர்ச்சில் எவ்வளவு கம்பீரமாகப் [illegible] எவ்வளவு ஹாஸ்யத்துடன் [illegible] டிக்கிறார், ஷா என்ன இண்டலாக எழுதுகிறார் என்று இங்கிலீஷ் படித்த, தமிழை மறந்த தமிழர்கள் புலம்புவதை பொருள்படுத்த தேவையே இல்லை. தங்கள் புலம்பலின் பலன் இன்னதென்று அறியாமலே, இவர்கள் புலம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

கிருஷ்ணன் தமிழ் மக்களை சிரிக்க வைக்கும் மகான். தமிழர்கள் தங்கள் துயரத்தை, சில நிமிஷங்களேனும் மறக்கும்படியாகச் செய்யும் பெரிய உபகாரியான கிருஷ்ணனை மதிக்காதவர்கள், நாட்டின் பொது நன்மைக்கு பாதகம் நினைப்பவர்கள் என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை.

கிருஷ்ணன் தமது சொந்த வாழ்க்கையிலும் பாமரசிகன் எனபது மதுரத்தை தோழியாகக் கொண்டதே, தெளிவாகக் காண்பிக்கிறது. கிட்டப்பாவுக்கு சுந்தராம்பாள் வாய்த்ததுபோல, கிருஷ்ணனுக்கு மதுரம் வாய்த்திருக்கிறார். இல்லை; தப்பிதம். சுந்தராமபாளுக்கு கிட்டப்பா வாய்த்ததுபோல, மதுரத்துக்கு கிருஷ்ணன் வாய்த்திருக்கிறார். இது தமிழ் நாட்டின் பாக்கியமாகும்.

செய்வன திருந்தச்செய் என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் கிருஷ்ணனை நான்வாழ்த்துகிறேன். பொறுப்பைஉணர்ந்து புத்திசாலித்தனத்துடன் காரியம்செய்பவர்கள் தமிழ்நாட்டில் அனேகர் இல்லை. அந்தச் சிறு கூட்டத்தில கிருஷ்ணன் ஒருவர். அனுயாசமாக, நமமவர்களை நகைக்கச் செய்யும் சிறந்த மேதாவியாகிய கிருஷ்ணனை தமிழ் நாடு ஒருநாளும்மறககாது.

* தமிழ்ப்பெரியார்கள். வ. ரா. பிரசுரம் [illegible] பண்ணை, தியாகராயநகர், சென்னை.

---

விபுலாநந்த சுவாமிகள்
இயற்றிய
**யாழ் நூல்**
என்னும் இசைத் தமிழ் நூல்.
கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு.
பொன் எழுத்துக்களாற் பொறிக்கப்பட்டு
முழுக் கலிக்கோ இடப்பட்டது.
விலை ரூபாய் 21-00 :: தபாற் செலவு 75 சதம்
சொற்ப பிரதிகளே கைவசமுண்டு.
சுன்னுகம் : தனலக்குமி புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆசாரிக் குடிகள் இருக்கும் கோடியிற் பூசாரி பூதர் வசித்து வந்தார் ......... அவர் விபூதி கொடுப்பதுவும் ஒரு தனி ரகம் .............."

# பூசாரி பூதர்

— சாணு —

**நா**லடி உயரம். ஸ்தூல சரீரம். பொலிவு நிறைந்த முகம். ஆசாரி ஜாதி. ஐம்பத்திரண்டு வயது. மொட்டைத் தலை. மண்டையிலே ஒரு வடு' பக்தி சிரத்தை நிறைந்தவர். வாய் நிறையப் பாக்கையடக்கிக்கொண்டு, தனது சிறு வல்லுவத்தை யவிழ்த்து வெற்றிலைக்குச் சுண்ணும்பு தடவுகிறூரே, அவர்தான் கதிரவேலு பூதப்பிள்ளை. பாரம் பரியமான பரம்பரையில் பூசாரி வர்க்கத்தைச் சேர்ந்தவர். ஆகையால் எங்கள் ஊரில் இவரைப் பூசாரி பூதர் என்று சொல்லிவந்தனர்.

■ அழகான கறுப்பு நிறமாயிருந்த போதிலும் பூசாரி பூதர் நல்ல வைதிகக் குடும்பத்தைச் சார்ந்தவர்போற் காணப்படுவர். ஒவ்வொன்றும் கால் அங்குலகனமுள்ள மூன்று திருநீற்றுப்பட்டைகள் நெற்றியில் துலங்கும். மையத்தில்ஒருசந்தனப்பொட்டு இலங்கும். அதன் மத்தியில் ஒரு துளி குங்குமம் மினுங்கும். ஆடை ஆபரண அலங்காரம் புனிதமாகச் செய்து கொள்வார். தலைமுறை தலைமுறையாகப் பூசாரித் தொழிலே இவர் குடும்பத்தாருக்கு ஆதரவு அளித்து வந்தது. இதன் காரணம் தெரியாது. பூதர் பூசிக்கும காளியம்மனுக்கு ஒருவேளை தெரிந்தாலும் தெரியலாம்.

■ ஆசாரிக் குடிகள் இருக்கும் கோடியிற் பூசாரி பூதர் ஓர் குடிசையில் வசித்து வந்தார். ஒரு சிறு தோட்டம் இவர் குடிசையைச்சுற்றி இருக்கிறது. அத்தோட்டத்திற் பூச்செடிகளும், மருந்துச் செடிகளும் உள. பூதருக்குப் பக்கத்துணையாக அவரது இரு மனைவிகளும் இளையாளின் பதினைறு வயதுப் பெண்குழந்தையும் இருந்து குடும்ப வேலைகளைக் கெட்டிததனமாய் நடாத்திவந்தார்கள்.

■ காத்திராப்பிரகாரமாகக் காளைகளுக்கு வரும் தீவிர நோய்களைச் சிகிச்சை செய்து வந்ததனுற் பூசாரி பூதர் ஒரு சிறந்த கால்நடை வைத்தியர் என்று பிரசித்திபெற்று வந்தார். காளியம்மாளின் கருணைதான் இதுவென்று எங்களூரிற் பேசிக்கொள்வார் சிலர். குழந்தை வைத்தியமும் செய்வார். நிதானமான வைத்தியம் கைதேர்ந்த வைத்தியர் என்றே சொல்ல வேண்டும். 'தாய் தந்தையர்களின் பாவங்களெல்லாம் குழந்தைகளின் தலையில்தான விடியும்' என்ற நன்மொழியைக் கருதியோ என்னவோ, குழந்தைக்கு வருத்தம் வந்தால் தாய்க்குத்தான் மருந்து கொடுத்துவருவார்.

■ கத்திவெட்டு, புலிமுகச் சிலந்திக்கடி, உளுக்கு முதலிய நோய்களுக்கும் வைத்தியம் செய்யும் விதம் விநோதமானது. கையிற் கத்திவெட்டென்றால், மருந்தைக் காலிற் கட்டச்சொல்வார். கத்திவெட்டும் காலக்கிரமத்தில் ஆறிவிடும். செய்பக்கூடிய சின்ன வைத்தியமெல்லாம் பூதர் கைக்குள்ளேயே அடங்கி நிற்கும். அம்பாளின் அகிலாண்ட அருள் இருக்கும்போது யார்தான் என்ன செய்யமுடியும்?

■ பெண்களுக்கும் பிள்ளைகளுக்கும் கையும் பார்ப்பார். அதுவும் பூசாரி பூதரின் சாஸ்திரம் என்றால் பெண்கள் பூராவும் நம்பிவிடுவார்கள். பொய்யைப் புராணமாக்கிப் புராணத்தைப் பொய்யாக்கும் பெரும வல்லமை பூதருக்கே உரித்தாயது. கல்யாண விஷயங்களிலும் இடையிடையே தலையிடுவார். பஞ்சாங்கம் பார்த்து நாட் குறிப்பதிற் பழுத்த அனுபவம் வாய்ந்தவர் என்றால் எங்களூராரும் சும்மா விடுவார்களா?

■ காளிகோயிற் காலைப்பூசை முடிந்ததும் ஒழுங்கை வழியாகப் பூதர் சமஸ்கிருத சுலோகம் சொல்லிக்கொண்டே வருவார்போற் காணப்படுவார். நாங்கள் அவரைத் தொடர்ந்து சென்றால் சுலோக உச்சரிப்பை நிறுத்திவிடுவார். அவருக்கு சமஸ்கிருகம் தெரிந்தாற்றனே? வாலிபராகிய எங்களுக்கும் தெரிந்தாற்றனே? எங்களுக்கும் பூதருக்கும் ஒன்றிலும் ஒத்துவராததற்குங் காரணங்கள் வேறும் பல உள. இதனல் எங்களைக் 'காவாலிப் பொடியன்கள்' என்றே அழைத்து வந்தார்.

■ பூதருடைய குடிசைக்கருகாமையில் அனுதிகாலம் தொட்டு எழுந்தருளியிருக்கும் காளியம்மன், ஒரு சிறு கோயிலைத் தனது இருப்பிடமாக்கிக் கொண்டாள். கோயிற் கதவு தாளிடப்பட்டிருக்கும். கெஞ்சும் பார்வையுடன் வருவார் பூதர். கதவைத் திறப்பார். அண்டையிற் கிணறு; அதிலிருந்து அம்மனுக்கு ஒருவாளி நீரபிஷேகம். அதன்பின் அன்னபிஷேகம். (இதைப் பூதர் வீட்டிலிருந்து ஒரு தூக்குச் சட்டியில் எடுத்து வருவார்) இதன்பின்தான் திவ்ய பூசை. இப்பூசைக்குக் கிரமமாய்த் தினமும் சென்று வருபவர் பூசாரி பூதர் ஒருவரேதான்.

■ கோயிலின் தர்மகர்த்தா வேலையும சேவிக்கும் சேவையும பூதரின் திருக்குடும்பத்தைவிட்டு இதுகாறும் வெளியே சென்றதில்லையென்று பெருமையாகச் சொல்வர். அக்காலத்திற் பெருமைக்குக் குறைச்சல் ஏது? ஒரு வருஷத்தில் இரு திருநாள். ஒரு மடை. ஒரு உற்சவம். மடை என்பது வடை முறுக்குப் போன்ற பலகாரவகை பரவிக் கொண்டாடும் ஒருவகைப் பூசையைக் குறிக்கும். உற்சவம் என்பது அம்மன் பவனி வருதல். இத் திருநாட்களுக்கு ஊரார் சேர்ந்து வரத்தவற மாட்டார்கள்.

■ பொழுது விடியுமுன் பறை கேட்கும. கோயிலடியில் தீபாலங்காரங்கள் தெரியும். கோயில் மடைகாலங்களில் நாதஸ்வரம் அளவெட்டிப் பொன்னரும் வந்திருப்பார். ஒரு ஆவர்த்தனம் பறைமேளம் முடிந்தபின், பொன்னர் தன் குழலை எடுத்தூதுவார். (இங்கு ஒரு ஆவர்த்தனமென்பது சுமார் ஒருமணி நேரத்தைக் குறிக்கும்.)

■ சோடாக்கடைச் சோமர் ஒரு மேசைவைத்துச் சர்பத் விற்பார். கடலைக்கார வள்ளியம்மை பக்கத்திலிருந்து கடலை விற்பாள். இரு வியாபாரிகளுமே அன்றைய வியாபாரத்தைச் சோபிக்கச்செய்வர். சீனவெடி தொடக்கம் எறிவெடிவரையும் பூசைக்குமுன். பூசைக்காலத்தில் மத்தாப்பு, விறிசு, அடக்கவிறிசு முதலியவைகள். பூசை முடிந்ததும் பொங்கல், வடை, முறுக்கு முதலியவற்றை மடை பரவுவார்கள்.

■ இந்நேரத்தில்தான் பூசாரி பூதருக்கு உருவேறும்.

காத லாகிக்க
　　சிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை
　　நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு
　　மெய்ப்பொரு ளாவது
நாத ளுமந
　　மச்சி வாயவே.

என்று தமது சொந்தப் 'பிடி'யில் கௌசிக இராகத்திற் பாடிக் கசிந்து கண்ணீர் மல்கி, அம்மாளே என்று அபிநயம் பிடிக்கத் தொடங்குவார். ஆட்டம் ஆடுவார். மணிப்புரி, கதக்களி முதலிய அந்நிய தேச ஆட்டங்களெல்லாவற்றையும் கலந்தாடுவார். "பொடியன்கள் தொந்தரவு பொறுக்கமாட்டேன். சோதனையில் அவர்கள் தேறவேண்டுமாம். அதற்காகக் கற்பூரம் கொளுத்துகிறூர்கள். தேங்காயுடைக்கிறூர்கள். என் உண்டியலில் மாத்திரம் ஒரு' சதமேனும் போடமாட்டார்கள்." என்று அம்மன் அவர்மூலமாகச் சொல்வாள். அப்பொழுது ஊராரெல்லாம் "இல்லை இன்றுதொடக்கம் உண்டியலிற் போடுவோம்" என்று கூறுவார்கள். வேர்த்தொழுகப் பூசாரி பூதர் கீழே விழுவார். விசுக்குகிறவர்கள் ஒரு புறம; தண்ணீர் தெளிப்பவர்கள் மற்றப்புறம்; இந்த ஆரவாரத்தில் ஐந்து நிமிடம் வரையில் ஓய்ந்து எழும்பிச் சிரிப்பார் பூதர் பூதர் சிரிக்க நாம் சும்மா இருப்போமா. நாமும் சிரிப்போம்.

■ சுகத்தைப்பார்த்துச் சந்தோஷமடைவது மனித இயற்கை. சந்தோஷமடைந்தாற் சிரிப்பதுவும் மனித இயற்கை. சுகமாய் இருந்து சந்தோஷமடைகிறவரைப்பார்த்துச்சிரிப்பது எந்த இயற்கை வகையிற் சேர்ந்தது?

■ பூசையாவும் முடிந்ததும் பூசாரியார் அங்கு வந்திருக்கும் பக்தசிகாமணிகளுக்கு அம்பாளின் அனுக்கிரகத்தைக் கொடுக்கவல்ல சின்னங்களாகிய விபூதி, சந்தனம், பத்திரம், தீர்த்தம் முதலியவைகளை கைகளில் ஏந்திக் கொண்டு பிரசன்னமாவார். பூசாரி பூதர் விபூதி கொடுப்பதுவும் ஒரு தனி ரகம். மூவ்விரல்களினலே திருநீற்றையள்ளி வயோதிபர் தொடக்

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைக் களஞ்சியம்

II

**இலைக் களஞ்சியத்தின் மாதிரிப் பிரதியில் விஞ்ஞான சாத்திரசம்பந்தமான சில கட்டுரைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அவற்றில் பரிபாஷைச் சொற்கள் எங்ஙனம் ஆளப்பட்டுள்ளன என்பதைப் பற்றி இங்கு ஆராய்வது பயன்படுமென்று கருதுகிறோம்.**

**மகரந்தச் சேர்க்கை** - இக் கட்டுரையில் பரிபாஷைச் சொற்கள் பொருத்தமான வகையில் வழங்கப்பட்டிருக்கின்றன. *Ovary*-சூல்பை, *Stigma* - சூல்முடி. *Style* - சூல்தண்டு என்ற சொற்கள் இங்கு ஆளப்பட்டுள்ளன. தமிழ்க் கலைச் சொற்கள் (த-க-சொ). என்ற நூல் இவற்றை இவ்வாறே வழங்குகிறது. *Anther* - மகரந்தப்பை, *Pollination* – மகரந்தச் சேர்க்கை, *Self pollination* - சுய மகரந்தச் சேர்க்கை, *Cross pollination* - பர மகரந்தச்சேர்க்கை என்று இக்கட்டுரையில் வரும் சொற்கள் வடமொழிக் கலப்புடையனவாயினும் மிகப் பொருத்தமானவை. த-க-சொ நூல் இப் பரிபாஷைச் சொற்களுக்கு முறையே பராகப்பை, பராகச் சேர்க்கை, தன்பராகச் சேர்க்கை, அயல்பராகச் சேர்க்கை என வழங்கியுள்ளது. எளிதில் பொருள் விளங்காத பராகம் என்ற சொல்லைவிட மகரந்தம் என்ற வடசொல் ஏற்புடையது.

**பாக்டீரியா** - இக் கட்டுரையில் *Bacteria* என்ற ஆங்கிலச் சொல்லைக் குறிப்பதற்குத் தமிழ்ச் சொல் ஒன்றும் அமைக்கப்படவில்லை. த-க-சொ நூலில் இதற்கு நுண்ணம் என்ற சொல் வழங்கப்படுகிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட தாவர நூலில் இச் சொல்லே ஆளப்பட்டுள்ளது. நுண்ணுயிரி என்று சொல்வதும் பொருந்தும். மைக்ராஸ்கோப் (*Microscope*) என்ற ஆங்கிலச் சொல்லும் இக் கட்டுரையிற் புகுத்தப்பட்டிருக்கிறது. இச் சொல் குறிக்கும் கருவியைப் பூதக்கண்ணாடி என்று சொல்வது தமிழ் நாட்டில் சாதாரண வழக்கத்தில் இருப்பதால், இதற்கு ஆங்கிலச் சொல்லை உபயோகித்தல் அநாவசியமாகும். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட தாவர நூலில் சூக்ஷ்மதர்சனி என்ற வட மொழிச் சொல் ஆளப்படுகிறது. இது எளிதிற் பொருள் விளங்கத்தக்கதன்று. அநாவசியமாக ஆங்கிலச் சொற்கள் புகுத்தப்பட்ட இக் கட்டுரையில், *Parasite* என்ற ஆங்கிலச்சொல்லுக்கு ஒட்டுண்ணி என்ற பொருத்தமான தமிழ்ச்சொல் வழங்கப்பட்டிருத்தல் பாராட்டுதற்குரியது. த-க-சொ நூலிலுள்ள கொள்ளை உயிரி என்ற சொல்லை விட இது ஏற்புடையது. இக் கட்டுரையில் *Saprophyte* - சாறுண்ணி என்று ஆளப்படுகிறது. இதை அழுகுசாறுண்ணி என்று சொல்வது பொருத்தமாயிருக்கும். த-க-சொ நூல் இதற்கு வழங்கும் பிணந்தின்னி என்ற சொல் வாய்ப்புடையதன்று.

**ராமன் இபெக்ட்டு.** இக் கட்டுரையில் *effect* என்ற ஆங்கிலச் சொல்லை விளக்கத் தக்க தமிழ்ச் சொல் ஒன்றும் வழங்கப்படவில்லை. இந்த ஆங்கிலச் சொல்லைத் தமிழிற் சரியாக உச்சரிக்கவும் இயலாது. இதன் பொருளைக் குறிப்பதற்குத் தமிழில் விளைவு என்று கூறலாம். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட பௌதிக நூலில் இத் தமிழ்ச் சொல் இப் பொருளிலேயே ஆளப்பட்டிருக்கிறது. இக்கட்டுரையிற் கூறப்படும் ஒளி விசித்திரத்தை இராமன் விளைவு அல்லது இராமன் கதிர்விளைவு என்று வழங்கலாம். *Spectrograph* என்ற ஆங்கிலச் சொலலும் இக்கட்டுரையில் அப்படியே தமிழில் வழங்கப்பட்டிருக்கிறது. த-க-சொ நூல் இப் பரிபாஷைச் சொல்லைக் குறிப்பிடவேயில்லை. ஆனால் இந்நூலில் *Spectrum* என்பது நிறமாலை, அல்லது வர்ணமாலை என்று கூறப்படுகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட பௌதிகநூல் நிறமாலை என்ற சொல்லை வழங்குகிறது. இச்சொல்லை அடிப்படையாகக் கொண்டு *Spectograph* - நிறமாலைக் கீறி என்று சொல்லலாம். இக் கட்டுரையில் *Frequency of Light* - ஒளியின் அடுக்கம் என்று கூறப்படுகிறது. இதை ஒளியலை அடுக்கம் என்று கூறுவது இன்னும் பொருத்தமாயிருக்கும். *Molecule* - மூலக்கூறு, *Surface Scattering* - புறச்சிதறல், *Volume scattering* - அகச்சிதறல் என்று இக் கட்டுரையில் வரும் சொற்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கன.

— சு. நடேசபிள்ளை —

**நைலான்.** செயற்கைப் பட்டு வகையைக் குறிக்கும் *Nylon* என்ற ஆங்கிலச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல் இப்பொழுது இல்லை. ஆதலின், ஆங்கிலத்திலுள்ளபடியே இச் சொல் இக் கட்டுரையில் வழங்கப்பட்டிருத்தல் ஏற்றுக்கொள்ளத்தக்கதே. இக் கட்டுரையில் *Hydrogen*, *Nitrogen* என்ற பரிபாஷைச் சொற்கள் ஆங்கிலத்தில் உள்ளபடியே ஆளப்பட்டிருக்கின்றன. த-க-சொ நூலில் இவை முறையே நீரகம், காலகம் என்ற செந்தமிழ்ச் சொற்களால் குறிக்கப்படுகின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட நவீன அசேதன ரசாயனம் என்ற நூலில் இவற்றிற்கு அப்ஜனகம், பாக்ய ஜனகம் என்ற வடமொழிச் சொற்கள் வழங்கப்பட்டுள்ளன. *Hydrogen* - ஜலவாயு, *Nitrogen* - வெடியுப்பு வாயு என்று சொல்வது எளிதில் பொருள் விளங்கத்தக்க முறையாகும். *Chemistry* என்ற வேதி நூலில் வரும் பரிபாஷைச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்கள் அமைக்க இயலாவிடின், அவற்றிற்கு மிகக் கடினமான உச்சரிப்புடைய வடமொழிச் சொற்களை உபயோகிப்பதை விட, ஆங்கிலத்தில் உள்ள சொற்களையே வழங்குதல் நலமெனத் தோன்றுகிறது.

**எக்ஸ்-ரே.** இப்பரிபாஷைச் சொல் ஆங்கிலத்தில் உள்ளபடியே இக்கட்டுரையில் வழங்கப்பட்டிருத்தல் ஏற்றுக்கொள்ளத்தக்கதே. இக் கட்டுரையில் இது ஒளிக்கதிர் என்று குறிக்கப்படுகிறது. இதைவிட ஊடுருவிக் கதிர் என்று கூறுவது பொருத்தமாயிருக்கும். இக்கட்டுரையில் *Anode*, *Cathode* என்ற பரிபாஷைச் சொற்களுக்கு நேர்மின்வாய், எதிர்மின்வாய் என்ற தமிழ்ச் சொற்கள் த-க.சொ நூல் வழக்கைத் தழுவித் தரப்பட்டுள்ளன. *Platinum* என்ற சொல் ஆங்கிலத்திலுள்ளபடியே இக் கட்டுரையில் வழங்கப்படுகிறது. த-க-சொ. நூலும் இதை அப்படியே ஆள்கிறது ஆனால் இதை வெண்பொன் என்று தமிழிற் சொல்வது பொருத்தமாயிருக்கும் என்று கருதுகிறோம். இரும்பைக் கரும்பொன் என்று சொல்வது பழைய தமிழ் வழக்காகும்.

**ஆல்கலாயிடு.** *Alkaloid* என்ற பரிபாஷைச் சொல் இக் கட்டுரையில் ஆங்கிலத்திலுள்ளபடி

**கலைக்களஞ்சியம மாதிரிப்பிரதியிற் சிலபரிபாஷைச்சொற்கள் எங்ஙனம் ஆளப்பட்டுள்ளன என்பதைப் பற்றி இக் கட்டுரையில் ஸ்ரீ. சு. நடேசபிள்ளை பி. ஏ., பி. எல்., எவ். ஆர். ஈ. எஸ்., அவர்கள் ஆராய்ந்துள்ளார்கள். அத்துடன் தமக்குத் தோன்றும் சில யோசனைகளையுங் கூறியுள்ளார்கள்.**

—ப-ர்.

வழங்கப்படுகிறது. த-க-சொ. நூல் இச் சொல்லையே குறிப்பிடவில்லை. *Alkali* என்பதற்குக் காரம் என்ற சொல் இதில் தரப்பட்டுள்ளது. இது க்ஷாரம் எனவும் படும். *Alkaloid* என்பதை க்ஷார உப்பு என்று சொல்வது பொருத்தமாயிருக்கும் என நினைக்கிறோம்.

**பரிணமம்.** *Evolution* என்ற பரிபாஷைச் சொல்லைக் குறிப்பிடுதற்கு இக்கட்டுரையில் பரிணமம் என்ற வடமொழிச் சொல வழங்கப்படுகிறது. த-க-சொ. நூலில் இப்பரிபாஷைச் சொல்லுக்குத் தோன்றுமுறை, வெளிவிரிவு என்ற தமிழ்ச் சொற்கள் ஆளப்பட்டுள்ளன. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட தாவர நூலில் இச் சொற்களே வழங்கப்படுகின்றன. டார்வின் என்ற விஞ்ஞான சாத்திர விற்பன்னரின் ஆராய்ச்சி உயிரினங்களின் விரிவு முறையைப் பற்றியதேயாகும்.

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

# சீனத்துக் கொம்யூனிஸ்டுகள்

**சீனத்துக் கொம்யூனிஸம் ஒரு புதிய ரகத்தைச் சேர்ந்ததெனச் சிலர் கூறுகின்றனர். அப்படியன்றெனச் சண்டைக்கு வருபவர்களுமுளர்! இக் கட்டுரையில் இச் சிக்கல்பற்றி ஓரளவுக்கு விளக்கப்பட்டுள்ளது. ப-ர்.**

சீனத்துக் கொம்யூனிஸ்ட் தலைவர்களின் ஆதிக்கத்திற் சீனத்தில் எத்தகைய அரசியற் கொள்கைகள் கையாளப்படுமென அறிந்துகொள்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

கொம்யூனிஸம் அங்கு தனது சுய ரூபத்தைக் காட்டுமா? சொந்தச் சொத்துகளுக்குத் தாரை வார்க்கப்படுமா? சீனத்தில் நிலவும் ஏனைய அரசியற் கட்சிகள் குலைக்கப்படுமா?

## புதிய பிரசுரம்

நான்கு வருடங்களுக்கு முன்னர் **சீனத்தின் புதிய ஜனநாயகம்** என்றவோர் சிறு பிரசுரத்தை மோஸே ரங் வெளியிட்டிருந்தார். அதிலே அவர் தமது கட்சியின் கொள்கைகள் அனைத்தையும் நன்கு விளக்கியிருந்தார். அதில் அவர் குறிப்பிட்டதாவது, "சீனத்தின் தற்போதைய சமூக அமைப்பு அடக்கியாளும் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டிருப்பதாயின், சீனத்தின் புரட்சித் தீ அவற்றையெல்லாம் பொசுக்குவதுடன் சுதந்திர ஜனநாயக சமுதாயத்தை அமைத்தே தீரும், அதற்குப் பின்னர் பொதுவுடைமைக் கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு புதிய சமுதாயத்தை அமைக்கும் பணியில் ஈடுபடும். இன்று சீனத்தில் ஏற்பட்டுள்ள புரட்சியானது முதலாவது தத்துவத்தை நிறைவேற்றி வைப்பதிற்றான் கண்ணுங் கருத்துமாக இருக்கின்றது.

## கூட்டு அரசாங்கம்

பாரிய வியாபாரங்களையும் பொதுவுடைமை யாக்குவதே சீனத்துக் கொம்யூனிஸ்டுகளின் தலையாய நோக்கமாகும். ஏனைய கட்சிகளுடன் சேர்ந்து கூட்டு ஆட்சியை ஏற்படுத்தினாலும் தமது முக்கிய நோக்கத்தினின்றும் அவர்கள் தவறப்போவதில்லை. சகல வங்கிகளும், கைத்தொழிற் சாலைகளும், வியாபார ஸ்தாபனங்களும் அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்க வேண்டும். அன்னிய ஆதிக்கத்திலேனும், அன்றேல் சொந்த நாட்டவர்களின் நிர்வாகத்திலேனுமுள்ள புகைரதவீதிகள் வங்கிகள் என்பனவற்றை அரசாங்கம் எடுத்து நடாத்த வேண்டும். நாட்டு மக்களின் சீவனோபாயத்துக்குப் பங்கம் ஏற்படாத வகையில் உள்ள சொந்தச் சொத்துக்களை அரசாங்கம் சிறிது காலத்துக்குப் பறிமுதல் செய்யமாட்டாது. ஏனெனில் சீனத்தின் செல்வநிலை மகா மோசமாக இருக்கின்றது. பிற்போக்கிலும், பிற்போக்கென்றே குறிப்பிட வேண்டும்.

## வித்தியாசம்

சோவியத்துக் கொம்யூனிஸத்துக்கும், சீனத்துக் கொம்யூனிஸத்துக்கும் வேறோர் வகையிலும் வித்தியாசம் உண்டு. ... சீனத்தில் ... தனிப் பண்புக்கு இடமிருக்கின்றது. ருஷியாவில் இது அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளது. விவசாயிக்கு நிலம் சொந்தமானதென்பது சீனத்தின் பிதாவாகிய டொக்டர் சன்யற் சென் அவர்களின் கொள்கையாகவும், இதையே மோஸே ரங் அவர்களும் வற்புறுத்துகின்றார். அத்துடன் கிராமங்களில் நிலவும் ஜமீன் முறைகளைத் தவிடுபொடியாக்க வேண்டுமென நிற்கின்றார். கிராமத்திலுள்ள நிலங்களைப் பறிமுதல் செய்யாது அதை விவசாய வளர்ச்சிக்கான முறையில் வகுத்து மக்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்பது மோஸே ரங்கின் நோக்கமாகும். அத்துடன் கிராமப் பொருளாதாரமும் காவந்து செய்யப்படும்.

கடதாசி, மை, பட்டு, பஞசு, வெடிமருந்து என்பனவற்றைச் சீனர்களே கண்டுபிடித்து அவற்றைச் சீராக்கினர். இப்படிப்பட்டவர்கள் கீழ்நாட்டு விவசாயிகளுக்கேற்ற ஒரு புதுமாதிரியான கொம்யூனிஸத்தைக் கண்டுபிடிப்பார்களோ என்னவோ?

## மொஸ்கோ பக்தி

சீனத்துக் கொம்யூனிஸ்டுகளைப்பற்றி மாஸி ஸ்டான்லி என்பவர் ஆங்கிலப் பத்திரிகையொன்றில் எழுதிய கட்டுரையிற் குறிப்பிடுவதாவது:

சீனத்துக் கொம்யூனிஸ்டுகள் மொஸ்கோ கட்டளைகளையே பக்தி சிரத்தையுடன் நிறைவேற்றி வருகின்றனர். மொங்கோலியாவிலும், மஞ்சூரியாவிலும் நிலவி வரும் கொம்யூனிஸ்ட் ஆட்சி சோவியத்து ரகத்தைச் சேர்ந்தது. அமெரிக்காவின் ஏகாதிபத்திய நோக்கங்களை மொஸ்கோ கண்

## உலக விவகாரம்

டித்து வருகின்றது அதே பிரசாரமானது மேற்கூறிய இரு இடங்களிலும் நடைபெறுகின்றன.

மோஸே ரங்கும் அவர் சகாக்களும மொஸ்கோ நகருக்குத் தவறாது விஜயம் செய்து வருகின்றனர்.

இத்தனைக்கும் மொஸே ரங் சீனத்து அபிமானியாகவே இருந்து சாத்தியமான காரியங்களைச் செய்துவருகின்றார். இதுகாரணமாகவே அவர் தமது சேனையுடன் முன்னேறி வருகின்றார்போலும்.

## விட்டுக்கொடுத்தல்

மோசே ரங் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடனேயே சகல ஒழுங்குகளையும் செய்வார் எனபது பலரது அபிப்பிராயம். ஆனாற் சீனத்து அரசியலில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையே நிலவி வந்திருக்கின்றதென்பதை யார்தான் மறுப்பார்கள். சமயத்துறையிலும சீனத்துக் கொம்யூனிஸ்டுகள் சகிப்புத் தன்மையுடன் நடந்து வருகின்றனராம்.

பீப்பிங் பகுதியைத் தமது தலைமைப்பீடமாக மோஸே ரங் அமைத்துள்ளார். வடக்கிலுள்ள அரச வம்சத்தினருக்கு இது பிடித்திருக்கின்றது. தென்பகுதி வம்சத்தினர் நாங்கிங் பகுதியை விரும்புகின்றனர். இந்த அழகில் மர்மங்கள் நிறைந்த சீனம் கொம்யூனிஸ்ட் கொள்கைகளைத் தழுவிக்கொள்ளுமா, அல்லது அவற்றை ஒதுக்கித் தள்ளுமா என்பதை விரைவில் அறிந்துகொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னுகம், சர்வதாரி, மாசி உ௩

— காந்தி ஆண்டு 80 —

## குற்றங்களும் பொலிஸாரும்

நாட்டிலே குற்றங்களும் அக்கிரமங்களும் அதிகரித்துக்கொண்டு செல்வதைப் பொதுவாக யாவரும் காணலாம். காலத்தில் இதைத் தடுக்க வழி காணுவிடின் என்னவாக இவைகள் முடியுமோ யாரறிவார். பொதுவாக நாட்டிற் சமாதானமும் ஒழுங்கும் நிலைநாட்ட வேண்டியவர் பொலிஸ் பகுதியினரே. ஏற்படும் குற்றங்களையும் அக்கிரமங்களையும் தடுக்க இவரால் இயலாதாவென்று கேட்கின்றும். புதிய முறையிற் களவுகள் கொள்ளையடி முதலிய துர்க்கிருத்தியங்கள் நடைபெற ஆரம்பித்துவிட்டன. நாளடைவில் இவைகள் பெருகிச் செல்கின்றனவேயன்றிக் குறைவதாகக் காணும்.


இவ்விதமாக அக்கிரமங்கள் நிகழ்வதைப் பொலிஸார் மாத்திரம் தமது கெட்டித்தனத்தால் தடுத்துவிட இயலாது. பொது மக்களாகவுள்ளோர் யாவரும் நாட்டின் பெரு நன்மையையும் சன்மார்க்க விருத்தியையும் இலக்காகக் கொள்பவராயின், பொலிஸாருடன் ஒத்துழைத்துக் கடமையாற்றி எத்தனையோ தீமைகளை நீக்கிவிடலாம். சன்மார்க்கத்துக்கு விரோதமாக நடந்து குற்றங்கள், பிழைகள், அக்கிரமங்கள் என்பன செய்துநிற்கும் வகுப்பினர் எந்நாட்டிலும் உளர். மேன்மக்களாகவுள்ளோர் பராமுகமாக வாழ்வதாற்ருன், இவர்கள் தொகை அதிகரித்துச் செல்கின்றது. எனவே இத் தீமை நீங்கவேண்டுமாயின் பொதுமக்கள் பொலிஸாருடன் சேர்ந்து உழைக்க வேண்டும். "எமக்கென்ன? யாவர் எப்பாடுபடினும் என்ன?" என்று பொறுப்பற்ற முறையிலே பொது மக்கள் நிற்பின், நாட்டில் நீதியையும் சமாதானத்தையும் நிலைநாட்டுவது இலகுவில் இயலுமா?

பொலிஸாராகவுள்ளோர் தமது கடமையை நன்குணர்ந்து மனச் சாட்சிக்குப் பங்கம் வராத முறையில் நடந்து கொள்வதும் அவசியமாகும். குற்றங்களைப் பெருக்கவும் அவரால் முடியும்; தடுக்கவும் அவரால் முடியும். கைலஞ்சத்தில் வேட்கையுடைய பொலிஸார் இருக்கும் வரையும் நாட்டிற் சமாதானம் விரும்பியபடி நிலைபெறச் செய்வது எப்படி? குற்றங்கள் செய்வோரைக் கண்டு பிடித்துத் தண்டனைக்குக்கொண்டுவருவது மாத்திரம் பொலிஸார் வேலையன்று. குற்றங்கள் சச்சரவுகள் ஏற்படுவதற்குக் காரணங்கள் யாவை என்பதனை ஆராய்ந்து நோக்கி அவைகளை நீக்குவது இவர்களின் பிரதம கடமையாகும். எனவே பொலிஸ் பகுதி உத்தியோகத்தர் நேர்மையும், தகுதியும் சன்மார்க்கமும் நிறைந்தவராக இருக்கச் செய்வது அரசினர் பெருங் கடனாகும். சகல உயர்ந்த குணங்களும் பொருந்தியவர்களே பொலிஸ் பகுதியில் உத்தியோகம் பெறச் செய்ய வேண்டும். இவ்விஷயத்தை அரசினர் மறவாதிருப்பது அவசியம்.

கிராம முன்னேற்றச் சங்கங்கள் சிறிது ஊக்கங்காட்டி இத்துறையில் வேலை செய்யின் நாட்டில் எத்தனையோ குற்றங்கள் களவுகள் அக்கிரமங்கள் என்பன தலைகாட்ட விடாது தடுக்கலாம். இச்சங்கங்கள் விழிப்பாக நின்று தொண்டாற்றின் பொலிஸார் தானும் தவறி நடக்க இடமேற்படாது. அவர்களும் நாட்டுமக்களுடன் ஒத்துழைக்க முற்படுவார். இப்போது பொலிஸ் உத்தியோகத்தர்கட்கிடையில் மனமாற்ற மேற்பட்டுவருவதைக் காணலாம். தமது பொறுப்பும் கடமையும் யாதென்பதை யுணர்ந்து தேசநலத்துக் குழைக்கும் மனப்பான்மை வரவரக் கூடிக்கொண்டு வருகின்றது. சுதந்திரம் பெற்ற நமது நாட்டினை, உண்மைப்படி உயர் நிலையை அடையச் செய்ய வேண்டின் எல்லோரும் களங்கமற்ற மனதுடன் ஒத்துழைக்கவேண்டும். அநியாயமுறையில் ஈட்டப்படும் பொருளா, தமது நாட்டின் உறுதியான உயர் நிலையா, பெரிதென்பதை அதிகாரத்தைப் பெற்ற இவ்வுத்தியோகத்தர் உணர்ந்து நோக்க வேண்டும். ஆகவே இந்த அரியசந்தர்ப்பத்திற் பொது மக்களாயுள்ளோரும் பொலிஸாரும் ஒத்துழைத்து நாட்டிற் சமாதானத்தையும் அமைதியையும் பாதுகாப்பையும் விரும்பியபடி நிலைபெறச் செய்யவேண்டியவர்களாகின்றனர்.

## ஸ்ரீமதி சரோஜினிதேவி

இந்தியத் தலைவர்களுள் முன்னணியில் வைத்தெண்ணப்படும் ஸ்ரீமதி சரோஜினிதேவி சென்ற செவ்வாய்க்கிழமை இரவு சடுதியாக ஏற்பட்ட இருதய நோய் காரணமாகக் காலமாயினர் என்று கேட்டு மிகத் துயரமடையலானேம். இந்திய மாதாவின் விடுதலைக்கு இடைவிடாது உழைத்துவந்த இந்த மாதுசிரோமணியை அறியாதார் உலகில் இல்லை. மகாத்மா காந்தியடிகளைப்போல் இவரும் இந்தியா சுதந்திரம் அடைந்ததைக் கண்ணுரக் கண்டுகளித்தனர். இது மக்கள் அனைவருக்கும் பெரிய ஆறுதலை அளிக்கும் விஷயமாகும். செய்த தொண்டுக்குப் பிரதியுபகாரமாக, இந்திய அரசாங்கத்தினர் இவ்வம்மையாரின் ஒப்பற்ற தகுதியையும் ஆற்றலையும் சரிவர நோக்கி ஐக்கியமாகாணத் தேசாதிபதியாம் பெரும் பதவியை இவர்க்கு அளித்தனர். அதைச் சரிவரத் திறமையுடன் நடத்தி வருங்கால் அம்மையார் காலஞ்சென்றனர். உலகில் எந்த நாட்டிலாவது ஒரு பெண்மணி இவ் வகைத்தான தேசத்தொண்டு செய்திருப்பாரென நாம் அறியவில்லை. இவ் வீரமாதின் தியாக வன்மையை என்னென்றுரைப்போம்? சுயநலம் பாராட்டாதும் தேகாரோக்கியத்தைக் கருதாதும் தேச நலத்தையே என்றும் இலக்காகக்கொண்டு ஐம்பது வருடங்களாக உழைத்து வந்தனர். இவர்போல் ஒருவரை இனிப் பாரத மாதா என்று காணக் கூடுமோ? பல துறைகளிலும் சிறந்த இந்த மேதையாரின் பிரிவு தாங்கொணுத் துயரை இந்திய மக்கள சிந்தையில் உண்டாக்கி விட்டது. அவரின் வாழ்க்கையை உதாரணமாகக்கொண்டு தேசப் பணி செய்வதே அவர்க்குச் செய்யக்கூடிய கைம்மாருகும். இந்த அரிய உத்தம பெண்மணியின் ஆத்மா இறைவன் பாதத்திற் சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.




ஸ்ரீ மந்திரி பொன்னம்பலம் அவர்களுக்குச் சென்றவாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வரவேற்பைப்பற்றிப் பலரும் பலவிதமாகப் பேசிக்கொள்ளுகின்றனர். வாசகர் ஒருவர் எழுதியனுப்பிய கடிதத்தில், அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'அந்தககாலத்திலே ஸ்ரீ ஜீ. ஜி. பொன்னம்பலம் அவர்களுக்கு வரவேற்பென்றால் யாழ்ப்பாணமே திரண்டுவிடுவது வழக்கம். இந்த மாபெருங் கூட்டங்களுடன் சென்ற வெள்ளிக்கிழமை (26-2-49) நடைபெற்ற வரவேற்பை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் தோன்றுகின்றது. சனிக்கிழமை நடைபெற்ற ஊர்வலம் தனிச்சிறப்பு வாய்ந்தது. குதிரை வண்டிக்கு முன்னுல் 8ப் பேரும் அதற்குப்பின்னுல் 10ப் பேரும் நடந்து சென்றனர். நாவலர் சந்தியில் ஆரம்பித்த ஊர்வலம் நகர சபையைச் சென்றடையுபவரை அவ்வளவாக வளரவேயில்லை. மண்டபத்தில் 250க்கு அதிகமானேர் கூடியிருந்தனர். இந்தக் கோலத்தை எப்படித் தாளிப்பது?"

இக் கடிதத்தைப் படித்துவிட்டு பத்திரிகை நிருபரிடம் அதைப்பற்றிக் கேட்டபோது அவர் ஆட்சேபிக்கவேயில்லை.

### நிவாரண நிதி


நாட்டிலுள்ள ஏழை மக்களுக்கு உதவி செய்ய அரசாங்கம படாதபாடுபட்டுவருவதைப் பார்த்துப் பலரும் ஆச்சரியப்படக்கூடும். தொழில்—சமூக மந்திரி ஜனுப் ஜயா அவர்கள் இதற்கென மேலதிகமாக ரூ. 8,000,000 நிதிமந்திரியிடம் கேட்டிருக்கின்ராராம். ஆகவே, மந்திரி ஜயா அரசாங்கத்திடம்பிச்சை கேட்கினருரே யென வாசகர்கள் முடிவுகட்டவேண்டியதில்லை. ஆனல், இவ்வளவு தொகையான பணத்தையும் ஏழை மக்கள் அனைவரும் அனுபவிக்கின்றனரா? இதுவே பொறுத்த கேள்வியாகும். நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள திறை அதிகாரிகளும் (டி. ஆர். ஓ.), கிராம விதானைமாரும் இது விஷயத்திற் கவனமாக இருந்து கடமையாற்ற வேண்டியவர்களாகின்றனர். வேலி பயிரை மேயக்கூடாதென்பதே இதன் தாற்பரியமாகும்.

### காரணம் என்ன?

தற்காலிக வித்தியாதிபதி ஸ்ரீ சில்வா அவர்களின் நிர்வாகத்தைப்பற்றி மெச்சாதவர் இல்லை. சுழியோட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு அவர் விலகிக்கொள்வது மிகுந்த சந்தோஷத்தை யூட்டலாம். ஸ்ரீ சில்வா தமது குறுகிய கால எல்லைக்குள் கல்விப் பகுதி ஊழல்களைக் கழுவித் தள்ளும் முயற்சியில் நல்ல வெற்றி பெற்றதுடன் நிர்வாகச்சிரமைப்பிலுமதிறமைகாட்டியுள்ளார். அவர் விலகுவதற்குக் காரணமென்ன? சுதந்திரம் பெற்ற இலங்கையே, நீ சொல்!

# கலைஞன் சடகோபன்

யாழ்ப்பாணம், 4-3-49



"யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்வதும், அங்குள்ள எனது பழைய அன்பர்களைக் கண்டு பேசுவதும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது." இவ்வாறு கானரத்தினம் வி. வி. சடகோபன் அவர்கள் வெள்ளிக்கிழமை (4-3-49) ஆகாய மார்க்கமாகப் பலாலி விமான நிலையத்துக்கு வந்திறங்கியதுங் குறிப்பிட்டார்.

ஈழகேசரிப் பத்திராதிபர் ஸ்ரீ நா. பொன்னையா அவர்கள், ஸ்ரீ சடகோபனுக்கு மலர்மாலை சூட்டி அவரையும் அவரது கோஷ்டியினரையும் வரவேற்ருர். ஈழகேசரி அன்பர்களுடன் வல்லுவெட்டித்துறை சிதம்பர வித்தியாலயத்து அதிபரும், ஆசிரியர்களும் ஏனைய அன்பர்களும் இவ் வரவேற்பு வைபவத்திற் கலந்துகொண்டனர்.

"சீதாதேவியிற் பறந்து வந்திருக்கிறீர்களா" என்று நான் ஸ்ரீ சடகோபனுக்குக் கூறிய போது அவர் திகைத்துப் போனர். "இல்லை, இலங்கை விமானத்தின் பெயர் சீதாதேவி" என்று நான் சொன்னபின்னர் "அப்படியா நல்லது" என்றுசொல்லி அன்பர்களுடன் சேர்ந்து சிரித்தார். சென்னையிற் சென்ற டிசம்பர் மாதத்தில், அதாவது சங்கீத விழாக்காலத்தில் நடைபெற்ற இன்னிசைக் கச்சேரிகள் மிக உயர்ந்தனவென்பது ஸ்ரீ சடகோபன் அவர்களின் அபிப்பிராயமாகும்.

இனிமையாகப் பேசிப் புன்முறுவல் பூத்த முகத்துடன் அன்பர்களை வரவேற்று அவர்களுடன் பேசுவது ஸ்ரீ சடகோபன் அவர்களுக்குரித்தான ஒரு தனிப் பண்பாகும்.

சமீபகாலத்தில் அவருடைய இன்னிசைக் கச்சேரிகளைக் கேட்டு அனுபவித்தவர்கள் அவருடைய இசைச் செல்வத்தின் உயர்வைப் பெரிதும் பாராட்டிப் பேசுவதைக் கேட்டு [illegible] [illegible] ஞனுக் சடகோபன் தமிழ் நாட்டில் விளங்குவதுடன் அவர் ஒரு தமிழ் எழுத்தாளருமாவார். பிரபல தமிழ் எழுத்தாளர்களினதும், பத்திரிகை ஆசிரியர்களினதும் அன்பையும் நன்மதிப்பையும் பெற்றுவரும் கானரத்தினம் அவர்கள் தமிழ்நாடு தம்மையும் எழுத்தாளர் கோஷ்டியிற் சேர்த்து வைத்திருப்பதை நினைந்து என்றுமே மகிழ்ச்சியடைந்து வருகின்ருர்.

நகைச்சுவை செறிந்த அவருடைய சில கட்டுரைகள் ஆனந்தவிகடன் முதலிய பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன.

விசேஷ மலர்களுக்குக் கட்டுரைகள் கதைகள் எழுதுமாறு பத்திரிகை ஆசிரியர்கள் அவரைக் கேட்பதுண்டு. ஆனல் சங்கீதத் துறையில் இறங்கியுள்ள ஸ்ரீ சடகோபனுக்கு ஆறுதலாக அமர்ந்து கட்டுரை எழுத நேரம் கிடைப்பதேயில்லை. தமது அமுதகானத்தைத்தான் வாரி வழங்குகின்ருர்.

கானரத்தினம் சடகோபனின் இன்னிசைக் கச்சேரி சனிக்கிழமை இரவு 7 மணிக்குச் சிதம்பர வித்தியாலயத்தில் நடைபெறும் வித்தியாலயத்து உதவி நிதிக்காக இக் கச்சேரி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அவரது தாராள சிந்தையை யார்தான் பாராட்டாது இருக்க முடியும். ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம் நகர மண்டபத்திலும் அன்னரின் இசை விருந்தை அனுபவிக்கலாம்.

ஸ்ரீமான்கள் வி. சேதுராமையா, (வயலின்) மதுரை கிருஷ்ணன் (மிருதங்கம்) வைத்தியநாதன் (கடம்) ஆகியோரும் ஸ்ரீ சடகோபனுடன் வந்திருக்கின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் துறைகளில் அனுபவம் வாய்ந்தவர்கள்.

"சரி, அன்பர்கள் அனைவரையும் நிறுத்திப் புகைப்படம் பிடிக்கலாமே" என்ருர் 'சானு'. "அசலான யோசனைதான்" என்று சொல்லி அனைவரும் வரிசையாக நின்ரோம்.

மறுகணம் விடைபெற்றுக்கொண்டு சனிக்கிழமை நடைபெறும் கச்சேரியிற் சந்திப்பதாகச் சொல்லி, விமான நிலையத்தை விட்டுக் கிளம்பினேம். —அரியரத்தினம்



## கேள்விப் பத்திர விளம்பரம்

பின்னுல் விபரிக்கப்படும் காணியைக் கொள்வனவு செய்வதற்குரிய கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

### காணியின் விபரம்

மல்லாகம் "மார்க்கனெல்லை" என்ற காணி நிலப்பரப்பு முப்பத்தொன்பது (39), கிணறும், செய்பயிர் வான்பயிர்களும் பனையும்; எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு ஒழுங்கையும் அம்பலவாணர் செம்பகனதருக்கும் மறபேருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனமும், தெற்கு ராமுப்பிள்ளை பெண் அன்னப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், இதடங்கலுஞ் சொரியலாக மூன்றில் இரண்டு பங்கான இருபத்தாறு (26) பரப்பு.

கேள்விப் பத்திரங்கள், யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டுச் சக்கிடுத்தாருக்கு (Secretary District Court, Jaffna) அல்லது மேலே சொன்ன கோட்டில் 378வது இலக்கத் தத்துவ வழக்கில் பராமரிப்புக்காரத் தத்துவக்காரனின் பிறக்றாசன சுன்னுகம் திரு. T. S. கனகரத்தினத்துக்கு, 1949ம் ஆண்டு மார்ச்சு மாதம் 21ந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக அனுப்பப்படுதல் வேண்டும்.

மற விபரங்கள் எதுவும் சுன்னுகம் பிறக்றர் திரு. T. S. கனகரத்தினமிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

வே. தம்பையா

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டு 378ம் இலக்கத் தத்துவ வழக்கின் தத்துவகாரனும், பராமரிப்புக்காரனும்.

சுன்னுகம்
4.3.49

[3634]


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீமதி சரோஜினி தேவி

சென்ற வருடம் இதே காலத்தில் இந்திய மாதா தனது அருந்தவப் புதல்வனும் சத்தியஞானி மகாத்மா காந்தியை இழந்து பெருந் துயருள் மூழ்கினள். இன்று அவரின் வலது புயமாக நின்று ஒப்பற்ற தொண்டுகளைப் புரிந்து அழியாப்புகழை நாட்டிய அருந்தவப் புதல்வியை இழந்து ஆரூத்துயருள் அமிழ்ந்து கின்றாள். எழுபதாவது வயது நிறைவு விழாவைக் கொண்டாடி ஒரு மாதகாலமாக முன்னர், அம்மையார்க்கு ஆப்படியாக அந்தலை வருமென எவரும் காத்திருந்ததில்லை. இந்தியாவின் தவப் பேறு இவ்வளவாகின்றது. ஒருவர் பின் ஒருவராக இந்தியாவின் மாபெருந் தலைவர்கள் மறைவது பெரியதோர் அதிட்டமே. ஐக்கிய மாகாணத்தின் தேசாதிபதியாகத் தமது கடமையை மிகத்திறமையுடன் நடாத்தி வந்த ஸ்ரீமதி சரோஜினி தேவியின் பிரிவு இந்தியாவுக்கு மாத்திரமன்று உலகம முழுவதுக்கும் பெரிய நட்டமேயாகும். **ஆசியாவின் மாபெரும் பெண்மணி''** என்று பாராட்டிப் பிரபல நூலாசிரியர் ஜோன் குந்தர் குறிப்பிடுகின்றார். இந்தியாவின் விடுதலைக்கு உழைத்த இவ்வீரப் பெண்மணியின் ஞாபகம் என்றும் நிலைபெற்று விளங்கும் என்பதிற் சந்தேகமில்லை. இவர் செய்த தியாகங்கட்கும் தொண்டுகட்கும் கைமாறுண்டா?

## கவியரசி

இப் பெண்மணி அரசியற்றுறையில் ஈடுபடு முன்னர் சிறந்த கவியரசியாக விளங்கினர். தமது தாய்நாட்டின் அழைப்பினைஏற்றுத் தமது சீவியகாலம் முழுவதையும் தேசத்தொண்டிற்கழித்தனர். கவியுலகில் மாத்திரம் நின்றிருப்பாராயின் இன்று உலகில் ஒப்பற்ற கலாவினோதராகத் திகழ்ந்திருப்பார். இவ்வம்மையார் சிறுவயதினராக விருக்குங்கால் ஆங்கிலத்தில் இயற்றிய இனியகீதங்களும் கவிகளும் இன்றும் ஆங்கில மறிந்த நாடுகளிற் போற்றப் பட்டுவருகின்றன. கவியரசர் தாகூர் அவர்கட்கு அடுத்தபடியில் புலமையிற் சிறந்தார் ஒருவர் உளரேல் அவர் இவ்வம்மையார் தான். **இந்தியாவின் வானம் பாடி** என்ற புனை பெயர் இவர்க்குப் பல்லாண்டுகளாக இருந்து வருகின்றது. கவியுலகில் மாத்திரம் தமது தொண்டுபோதாதெனக் கருதி அரசியலிற் புகுந்து அளப்பருந் தொண்டு புரிந்துவந்தனர். மூலைகளிலிருந்த பெண்களை இழுத்து முன்னிலையில் தொண்டு புரியச் செய்தவர் இவரன்றோ? புதிய கிளர்ச்சிகள் கொள்கைகள் என்பனவற்றை நாட்டில் நன்கு செறியச் செய்து சுதந்திரதாகம் ஏற்படும் படி இடைவிடாது சொற்பொழிவாற்றிய பெருமையும் இவர்க்கேயுரியதாயிற்று.

## பிரதம சீடர்

அரசியற்றுறையில் மாத்திரமன்றிச் சமுதாயத்துறையில் அரியபெரிய திருத்தங்கள் வேண்டுமென்று இரவும் பகலுமாக உழைத்துவந்தனர். மூடநம்பிக்கைகள் ஒழிந்து நாடு உய்யவேண்டுமாயின் பெண்கள் கல்விகற்று முன்னிலைக்கு வரவேண்டுமென்பதைப்பன்முறையாக வற்புறுத்தி வந்தனர். மகாத்மாகாந்தியின் பிரதமசீடராகவந்தபின்னர்தான் அரசியல்உலகில் இவர் நாமம் நன்கு அடிபடத்தொடங்கியது. இந்தியா அஹிம்சைவழியின்று விடுதலை யடையவேண்டுமென்பதை முற்றாக அங்கீகரித்து அதனை நாட்டுமக்கட்குத் தமதுசொற்சாதுரியத்தால் விளக்கிவந்தனர். சென்ற ஐம்பதுவருடங்களாக இவர் ஆற்றியபாரந்தபணிகள் இம்மட்டன்று. இம் மாதரசியின் பேராற்றலையும், தியாகவன்மையையும், சுயநலவெறுப்பையுங்கண்ட கோபாலகிருஷ்ண கோகலே, கவியரசர்தாகூர், மகாத்மாகாந்தி என்னும்மேதாவிகள் இவரைத்தமது ஆருயிர்த் துணையாளராகக்கொண்டு தாய்நாட்டுக்கு உழைத்தனர். இடைவிடா உழைப்பும் தியாகமுமே அந்தியாகாலத்தில் இவர் நோய்வாய்ப்பட்டமைக்குக் காரணமாகும். கடைசிவரையும் தேசசேவையைக் கைவிட்டாரில்லை.

... கு. அ. ...

## நாவன்மை

மற்றைய பெருமைகளுடன் பேச்சலங்காரம்வாய்ந்த இவர் போன்ற இன்னொருவரைக் காணவியலாது. இவர் தொண்டுகட்கெல்லாம் சொற்பொழிவாற்றும் சிறந்த ஆற்றலே மிகத்துணையாகவிருந்தது. இவர் பேச்சைக் கேட்கவும் இவருடன் சம்பாஷிக்கவும் அவாக்கொண்ட மேல்நாட்டாரும் பலருளர். தாம் பேசாது இவரைப் பேசவிட்டுக் கேட்டுக் கொண்டிருப்பாராம் வெள்ளையர்கள், மணித்தியாலக்கணக்காக மிக்க சாதுரியத்துடன் அலங்காரமாக உணர்ச்சிததும்பப் பேசக்கூடியவர் இவர் ஒருவரே. ஆங்கிலத்தில் எவ்வளவு திறமையுடன் பேசுவாரோ அதிலுஞ் சிறப்பாக இந்தியப்பாஷையிற் சொற்பொழிவாற்றுஞ் சக்தியும் இவர்க்குண்டு. பிரிட்டிஷாரின் பொய்ப்பிரசாரத்தால் இந்தியாவைப்பற்றித் தப்பான அபிப்பிராயம் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் பரம்பிவந்தது. காங்கிரஸ் மகாசபையின் பிரதிநிதியாக மேல்நாட்டுக்குச் சென்று இந்தியாவைப்பற்றி உள்ளபடிஎடுத்துரைத்து நல்லெண்ணம் **அந்நாட்டுமக்கள்** மனதில் உண்டாகச் செய்த பெருமையும் இவர்க்கே உரியது. இந்தியமாதாவுக்கு இவர் செய்த அரியதொண்டினைநோக்கியே 1925 ம் வருடம் நடந்த இந்தியதேசியக்காங்கிரவின் தலைமை இப் பெருமாட்டிக்கு அளிக்கப்பட்டது. தேசமக்கள் செய்யக் கூடிய ஒப்பற்ற கைமாறு இதிலும் பெரியது வேறுயாது? தாம்செய்த தொண்டு பயனாக இந்தியா சுதந்திரமடைந்ததையும் கண்ணாரக் கண்டுகளித்தனர். இந்திய அரசினர் இவர் ஆற்றலையும் தியாகத்தின் பெருமையையும் ஒருங்கு நோக்கியே ஐக்கியமாகாணதுத் தேசாதிபதியாக நியமித்தனர். ஏற்ற கடமையை எவ்வளவு திறமையுடன் சமாளித்தனரென்பது யாவரும் அறிந்த விஷயம்.

## விசுவாசசேவை

வகுப்பொற்றுமையை நிலைநாட்ட இவர் கையாண்ட முயற்சிகள், அடைந்த சிரமங்கள் என்பனவற்றிற்கு எல்லையில்லை. இந்துக்களும் முஸ்லீம்களும் ஒத்து வாழவியலும்; அதை எப்படியாகினும் நிலைநாட்டவேண்டுமென விசுவாசத்துடன் உழைத்து வந்தனர். முஸ்லீம்களும் இவ்வம்மையார் மாட்டு நம்பிக்கையும் விசுவாசமும் பாராட்டி வந்தனர். காலஞ்சென்ற ஜனுப் ஜின்னு அவர்கள் கூட இவ்வம்மையார் மாட்டுப் பெருமதிப்பும் நம்பிக்கையுங் காட்டிவந்தனர். என்றாலும் கருதிய வகுப்பொற்றுமை அனுட்டானத்திற் கைவரப்பெறாதது இவர்க்குத் துக்கத்தை விளைத்தது. தேசாதிபதியாக இருந்த காலத்தும் வகுப்புக்கலகங்கள் கோராது மிகச் சாதுரியமாக அரசியலை நடாத்திவந்தனர். இந்தியாவிற் பெண்களுக்கு எத்துறையிலும் சமவுரிமை வேண்டுமென வாதாடிப் பெற்றுக்கொடுத்தவர் இவரே யாவர். இப் பெருமைவாய்ந்த பெண்ணரசி 1921-ம் வருடம் இலங்கைக்கு ஒருமுறை வந்து அரிய பெரிய சொற்பொழிவுகள் செய்தனர். மகாத்மாவின் போதனைகளை இங்கு யாவர்க்கும் மிகத் தெளிவாக இவர் எடுத்துக் காட்டியதும் யாவர் மனத்திலும் ஞாபகமாகவிருக்கும்.

## மங்காத ஞாபகம்

இவ்வாறாக அரசியற்றுறையிற் பெரிய தொண்டினையும் சமுதாயவாழ்க்கையிற் புரட்சிகளையும் செய்து இப்போதுமறைந்த ஸ்ரீமதி அம்மையாரின் ஞாபகம் என்றும் அழியாது துலங்கும் என்பதிற் சந்தேகமில்லை. இந்தியாவின் சுதந்திரப்போர் எழுதப்படும் சரித்திரத்தில் இப்பெண்ணரசியின் நாமம் பொன் எழுத்துக்களாற் குறிக்கப்படும் என்பாம். அரிதுபெற்ற சுதந்திரம் பங்கமடையாது, பாதுகாப்பதே இந்தியமக்கள் இவர்க்குச் செய்யக் கூடிய கைம்மாறு. இன்னுஞ் சில ஆண்டுகட்கு உயிர்வாழ்ந்திருப்பின் இந்தியாவின் பெருமைக்கே மிகவாதரவு ஏற்பட்டிருக்கும் விதியின்பயன் இவ்வாறாயிற்று. சுயநலம் பாராட்டாது, கைம்மாறற்றதொண்டாற்றிய இந்தப் பெருந்தகைப்பெண்மணியின் ஆத்மா சாந்திபெறுவதாக.

---

கிழக்குத் தபால்

நமது நிருபர்

# மட்டக்களப்பு விமானத் தளம்

**மட்டக்களப்புப் பகுதி**யில் ஆகாயவிமானத் தளத்தை நிறுவுவதற்கான ஒரு இடத்தைத் தெரிவுசெய்ய அரசாங்கம் ஒரு நிபுணரை இப் பகுதிக்கு அனுப்பவிருப்பதாக ஒரு செய்தி வெளியாகியது. அதனைத் தொடர்ந்து கல்முனைப் பிரதிநிதி முதலியார் எம். எஸ். காரியப்பர் அவர்கள் **அம்பாறை**யில் அத் தளத்தை நிறுவலாமென அரசாங்கத்திற்கு யோசனை கூறியிருப்பதாக அறியக்கிடக்கின்றது. இச் செய்தி நகர மக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. நகரின் 3 மைல் சுற்றுவட்டாரத்துள் இத் தளம் அமைந்தாற்றான் விமானத் தபால் போக்குவரவு முதலிய பல முன்னேற்றமான வேலைகளைச் செய்யலாம் என்பது மக்கள் அபிப்பிராயம். இதே நோக்கத்திற்காக அரசாங்கம்சிலவருடங்களின் முன் தெரிவுசெய்த **பெரியதுறை**யே பொருத்தமானதென்பது இவர்கள் கட்சியாகும்.

## அரிசி விலை குறையுமா?

ஆகாயவிமானத்தளம் ஒரு புறமிருக்க 'அரிசி விலை குறையுமா? என்ற சத்தமே காதில் விழுகின்றது. தினமும் புகைவண்டிமூலம் பெருந்தொகையான அரிசி வெளியூர் செல்வதே இதற்குக் காரணமாகும். ஆனால் தற்போது இங்கு முன்மாரி அறுவடை ஆரம்பமாகியுள்ளது. இதனால் அரிசி விலை குறையுமா? இல்லையா? என்பது இங்கு வந்து சேர்ந்துள்ள வியாபாரிகளிலேயே தங்கியுள்ளது! புது நெல்லும் ஊர்பார்க்க ஆசைப்பட்டால் அவர்கள் என்னசெய்வார்கள்?

## குருதேவர் ஜெயந்தி

வழிற்றுணவுக்காக நாம் அதிகம் அல்லற்படாதிருக்கும்பொருட்டு செவிக்குணவளிக்க விசேஷமான ஏற்பாடுகள் பல இடங்களில் செய்யப்பட்டன. குருதேவர் ஜெயந்தியே இதற்குக் காரணமாகும். ஸ்ரீ ராமக்கிருஷ்ணச் சங்கப் பாடசாலை உள்ள இடங்களிலெல்லாம் பொருள் மிக்க சொற்பொழிவுகளையும், சுவை மிக்க கீதங்களையும் மக்கள் கேட்டு இன்புற்றனர். மட்டக்களப்பிலும் அக்கரைப்பற்றிலும் நடைபெற்ற விழாக்கள் குறிப்பிடத்தக்கன.

## பிடிக்கவில்லையா?

மட்டக்களப்புக்கு அரசியல் பிடிக்கவில்லையோ, அல்லது அரசியலுக்கு மட்டக்களப்பைப் பிடிக்கவில்லையோ என்று ஐயுறவேண்டியிருக்கிறது. ஏனெனில் இங்கு இடதுசாரிகளின் பொதுவுடைமைப் பிரசங்கங்களைத் தவிர வேறெதையும் குறிப்பிடுவதற்கில்லை. இதுவரை இப்பகுதியின் அரசியல் அபிப்பிராயங்களை வெளியிட்டு வந்த **மட்டக்களப்புச் சங்கம் கிழக் கிலங்கைத் தேசிய மகாசபை** என்ற சங்கங்களின் பெயரை இன்று கேட்க முடியவில்லை. கடந்த பொதுத் தேர்தலின்பின் இவற்றின் பேச்சே எழவில்லை. இதனால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் தங்களுக் கிஷ்டமானபடி நடந்துகொள்வார்களா?

## தேசியக்கொடி

மட்டக்களப்புப்பகுதிப் பிரதிநிதிகள் கொடிப் பிரச்சினை பற்றிக்கூட மௌனம் சாதிக்கிறார்கள். இதனால் இப்பகுதி மக்களும் வாளேந்திய சிங்கக் கொடியை வரவேற்கிறார்கள் என்று அர்த்தமாகாது. இதற்குச் சென்றவருடம் சுதந்திரதினத்தன்று பொத்துவிலில் நடந்த சிங்கள—முஸ்லீம் குழப்பமே அத்தாட்சியாகும். முஸ்லீம் பிரதிநிதிகள் அனைவரும் ஐக்கிய தேசியக் கட்சியினராயினும் கொடிப் பிரச்சினையில் அக்கட்சி செய்யும் முடிவை முஸ்லீம் மக்கள் ஏற்பார்கள் என்று எண்ணுவதற்கில்லை. சிங்கக் கொடியைத் தேசியக் கொடியாக்க வேண்டும் என்னும் பிரேரணையைக் கொண்டுவந்த ஜனுப் எஸ். சின்னலெப்பையின் தொகுதியில் இம்முறை சிங்கக் கொடி முற்றவெளிக் கொடித் தம்பத்தில் பறக்கக்கொடுத்து வைக்கவில்லையே!

## கற்குடா வாடிவீடு

இயற்கையழகுவாய்ந்ததும் சுகஸ்தானமுமான கற்குடா வாடிவீட்டை பிரயாணிகளின் வசதியை உத்தேசித்துத் தற்காலத்துக்கேற்ற முறையிலே திருத்தியமைக்க அரசாங்கமிட்ட திட்டங்கள் தயாராகியும் விட்டன. இந்த நேரத்தில் இலங்கை டைம்ஸ் பத்திரிகையில் ஓர் ஆங்கிலேயர் கொழும்புக்குத் தூரமான இடத்தில் (ஆங்கிலேயர் அனுபவிக்க முடியாத இடத்தில்) இவ்வளவு பணம் கொட்டலாமா என இரைகின்றார். அதை அஞ்சல் செய்து டைம்ஸ் பத்திரிகைஆசிரியத் தலையங்கமும் எழுதியுள்ளது. அயல்நாட்டினருக்குமட்டுமல்லாது, உள்நாட்டினர் கண்டுகளித் திவளை யாக இராது பிரயாணம் செய்ய வசதிசெய்ய வேண்டியது அரசாங்கத்தின் கடமையல்லவா? இவ் வரசாங்கத் திட்டத்தைக் கண்டு விடுமுறை காலங்களிற் பாசிக்குடாவில் நீராடிக் கற்குடாவில் உல்லாசமாகக் களிக்கலாம் என மகிழ்ந்திருந்தவர்களுக்கு இக் கடிதம் பெருங் கலக்கை அளித்துள்ளது! ஆனால் அரசாங்கம் குறித்த திட்டங்களைக் கைவிடக் கற்குடாப் பிரதிநிதி ஸ்ரீ வி. நல்லையா விடமாட்டார் என்ற நம்பிக்கை மக்களுக்கு நம்பிக்கையைக் கொடுக்கின்றது.

## மூளைக்கு விருந்து

அவப்பொழுதைத் தவப்பொழுதாக்குவதற்காக மட்டக்களப்புக் கிறிஸ்தவ வாலிபர் சங்கம் படித்தவாலிபர்களிடம் இருந்து வினாக்களைப் பெற்று அறிஞர்கள் நால்வரைக் கொண்டு விடை சொல்ல ஏற்பாடு செய்தது. இம் முறை, திருவாளர்கள் எஸ். அம்பலவாணர், ஏ. தவராசா, சேதுகாவலர், எஸ். ஜே. துணைசேரம் ஆகிய நால்வரும் தங்கள் விடைகள் மூலம் மூளைக்கு விருந்தளித்தனர்.

## உபசாரக் கூட்டம்

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியருள் ஒருவராகிய திரு. ரீ. மாணிக்கவாசகர் கொழும்பு ஆசிரிய கல்லூரியில் பயிலச் செல்லும் வைபவத்தை முன்னிட்டு அவருக்கு மேற்படி கல்லூரி ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் ஓர் தேநீர் விருந்து சென்ற திங்கட்கிழமை மாலை அளிக்கப்பட்டது. கல்லூரித் தலைமை யாசிரியர் திரு. வி. சுப்பிரமணியம் அவர்கள், திரு. மாணிக்கவாசகரின் கல்வி பயிற்றும் திறமையையும் மற்றைய குணாதிசயங்களையும் எடுத்துரைத்தார். ஆசிரியர்கள், திருவாளர் எஸ். முருகேசு வித்துவான் எஸ். ஆறுமுகம் திரு. எம். சந்தியமூர்த்தியும் குறிப்புரை கூறினர். தமக்களித்த உபசாரத்தையிட்டு திரு. மாணிக்கவாசகர் நன்றி கூறினார். —கடி.

## ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜெயந்தி விழா

வண்ணை வைத்தீசுவர வித்தியாலய இந்து மாணவர் சங்கத்தால் இந்த மார்ச் மீ 1ந் உ செவ்வாய்க்கிழமை பிற்பகல் வித்தியாலய மண்டபத்தில் இவ் விழா கொண்டாடப்பெற்றது.

ஆசிரியர்களால் பகவானைப் பற்றிய பேச்சுக்கள் நிகழ்த்தப்பெற்றன. பிரதம ஆசிரியர் திருவாளர் ச. அம்பிகைபாகன் அவர்கள் குறிப்புரை கூறினார்கள். தலைவர் முடிவுரையுடன் கொண்டாட்டம் நன்கு நிறைவேறியது. முடிவில் அனைவர்க்கும் பிரசாதங்கள் வழங்கப்பெற்றன.


## தேவை

பளை ஐக்கிய பண்டகசாலை சமாஜத்திற்கு ஆங்கில அறிவுமுள்ள மனேஜர், விற்பனைவாளன் வேண்டப்படுகின்றனர். மனேஜர் ஆரம்ப சம்பளம் ரூ. 100-00; ரொக்கப்பிணை ரூ. 1000 00; உறுதிப்பிணை ரூ. 4000 00 அல்லது ரொக்கப்பிணை ரூ. 2000-00. விற்பனவாளன் ஆரம்ப சம்பளம் ரூ. 75-00; ரொக்கப்பிணை ரூ. 750-00; உறுதிப்பிணை ரூ. 2000-00 அல்லது ரொக்கப்பிணை 1000-00. மனுக்கள் 15–3–49-க்குள் காரியதரிசி, பளை சமாஜம், ஆனையிறவு (Elephantpass) என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

வி. கந்தையா
கௌரவ காரியதரிசி
பளை சமாஜம்.

ஆனையிறவு
3-3-49
[3635]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஜெயந்திவிழா

## கோப்பாய்

சென்ற செவ்வாய்க்கிழமை 1. 2. 49 மாலை கோப்பாய் அரசினர் பெண்கள் ஆசிரியகலாசாலையில் ஸ்ரீ இராமகிருஷ்ண தேவர் ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. கொண்டாட்டம் ஒரு கூட்டுப்பிரார்த்தனையாகவே நடைபெற்றது. கீழைத்தேசக்கலாச்சாரமும் நாகரீகப்பண்பும் உருவெடுத்தாற் போல இப்பிரார்த்தனையை சபைக்கலாசாலை ஆசிரியைகளும் மாணவிகளும் நடாத்தி வைத்தனர்.

மண்டபத்திற் குருதேவரின் படம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கு ஆண்களும் பெண்களும் பயபக்தியுடன் கூடியிருந்தனர். இக்காலத்து ஆபாச அலங்கோல சோடனைகளோ, ஆபரணச் சுவையோ கிடையாது. மாணவிகள் பக்கவாத்தியங்களுடன் பிரார்த்தனை செய்தனர். நிகழ்ச்சிகள் ஒலிபெருக்கப்பட்டன. குருதேவர்படத்துக்கு நைவேத்தியம் படைத்துத் தீபாராதனை செய்தார்கள்.

அதன்பின் செல்வி G. D. பொன்னுத்துரை அவர்கள் குருதேவரைப்பற்றி நியூயோக் நகரில் சுவாமி விவேகானந்தர் செய்த பிரசங்கத்தைத் தழுவிச் சிறந்த விரிவுரை நிகழ்த்தினார்கள். வேத உபநிடத சாரங்களைத் தொகுத்துக் கூறி, குருதேவர் இந்தியாவுக்கும் உலகத்துக்கும் எவ்வாறு ஆத்மீகப் பணியாற்றினார் என்பதை விளங்க வைத்தார்கள். அடுத்ததாக ஈழகேசரி அதிபர் திரு. நா. பொன்னையா அவர்கள் காந்தியடிகளும் குருதேவரும்என்னும்விஷயமாகச் சிறந்தசொற்பொழிவாற்றினார்கள். குருதேவர்ஞானகாண்டத்தையும், காந்தியடிகளின்கரும காண்டத்தையும் ஒப்பிட்டு கதைகளையும் சொல்லி சபையோரை மகிழ்வித்தார்கள். அடுத்தபடியாக கலாசாலை மாணவி செல்வி ஏ. நடராசா அவர்கள் குருதேவர் ஆத்மீக செல்வர்களின் உட்கருத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டி மக்கள் பின்பற்றக் கூடிய வழிவகைகளையும் தொகுத்துக் கூறினார்கள்.

கலாசாலை அதிபர் செல்வி முருகேசு அவர்கள் தமது குறிப்பிலே திரளான மக்களை அச்சிறிய மண்டபத்தில் ஒழுங்காக அமர்த்துவதில் தங்களுக்கிருந்த சிரமத்தை எடுத்துக்கூறி, ஓர்விசாலமான மண்டபம் ஒன்றையும் அடுத்த குருதேவர் ஜெயந்தி விழாவுக்கிடையில் அரசினர் ஒழுங்கு செய்து கொடுப்பதில் அங்கு சமூகமளித்திருந்த வடமாகாண வித்தியாதிகாரி அவர்களைச் சிரத்தையெடுக்கும்படியும் கேட்டுக் கொண்டார்கள்.

## கோக்குவில்

சென்ற செவ்வாய்க்கிழமை காலை கொக்குவில் கிழக்கு ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை மண்டபத்தில் மாணவர் அங்கத்தினரால் மேற்படி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பிரார்த்தனைகளும் பூஜைகளும் பேச்சுக்களும் நடைபெற்றன. செல்விகள் அ. ஞானரஞ்சிதம், ச. சுந்தரேஸ்வரி, பொ. இரத்தினம்மா, க. இரத்தினம், இ. அமுதவல்லியம்மா ஆதியோர் குருதேவரையும், சாரதாதேவியாரையும் விவேகாநந்தரையும் பற்றிப் பேசினார்கள். மாணவிகளின் பாட்டுக்களும் ஆசிரியர்களின் குறிப்புரைகளும் நிகழ்ந்தன. பிரசாதமும் வழங்கப்பட்டது.

## அக்கரைப்பற்று

மட்டக்களப்பு அக்கரைப்பற்று ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாலயத்தில் ஸ்ரீ கணேசானந்த சபையாரினதும், வித்யாலய ஆசிரியர்களினதும் ஆதரவில் 1-3-49 செவ்வாய் பிற்பகல் மேற்படி விழா கொண்டாடப்பட்டது. அலங்காரம் செய்யப்பெற்ற ஸ்ரீ ராமகிருஷ்ணர் திருவுருவச் சிலை யானைமீது வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. "எல்லாமதத்தினரும் கூடுவோமே ஏகம் கடவுளென்று பாடுவோமே" என்ற பாட்டை மாணவர் பாடிக்கொண்டேசென்றனர். ஊர்வலத்துக்குப்பின் வித்யாலயத்தில் பாரதிமன்றத்துக்கு சுவாமி நடராஜானந்தஜீ கல் நாட்டினார்கள். அவ்வமயம் வித்யாலயத் தலைமை ஆசிரியர், பாரதிதான் தமிழ்நாட்டை உயர்நிலையடையச்செய்த உத்தமவீரன். அவருக்கு ஈழத்திலும் மன்றம் அமைக்கவேண்டும். தமிழன் எங்கிருக்கிறானோ அங்கெல்லாம் பாரதிமன்றம் அமைத்துத் தமிழன் தமிழனை வீரவணக்கஞ்செய்யவேண்டும் என்று சுருக்கமாகக் கூறியுள்ளார். இப்பாரதிமன்றத்துக்கு ஸ்ரீமான் தாமோதரம்பிள்ளையவர்கள் முதற்காணிக்கையாக 1001 ரூபாய் நன்கொடையாகக் கொடுத்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

—கடிதம்

# வானத்தை வில்லாக்கலாமா?

**'பட்டம்பதவி துறக்கத் தயார்'**
—மந்திரி பொன்னம்பலம்

யாழ்ப்பாணத்துக் கரையூர்ப்பகுதி மக்கள் சமீபத்தில் மீன்பிடி ஆராய்ச்சிப்பகுதி மந்திரி ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களுக்கு ஒருவரவேற்பு அளித்தனர். அவர் அன்று தமதுபேச்சிற் குறிப்பிட்டதாவது: "எனது தொகுதிக்கு நான் ஒருகாரியமும் செய்யவில்லையெனக் குறைகூறுகின்றனர். இரண்டரை மாத காலத்துக்குள் நான் வானத்தை வில்லாக வளைக்க முடியுமா?...... நான் இரகசியமாக யூ. என். பி. அரசாங்கத்திற் சேரவில்லை. பட்டம் பதவியை நான் ஒரு அட்டாகவும் மதிப்பதில்லை. மந்திரிப்பதவியை ஏற்க வேண்டாமென மகாசனங்கள் கூறினால் நான் பதவியைத் துறக்க என்றுமே தயாராக இருக்கின்றேன். பிரதிநிதிகள் சபையிலே சில தமிழ்க்காங்கிரஸ் பிரதிநிதிகள் தமிழரின் முன்னேற்றத்துக்காக நான் விடுத்துக்கொள்ளும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகளாக இருக்கின்றனர்.

"யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து மீனுங்கருவாடும் வெளியே அனுப்பக்கூடாதென்ற தடையை உடனே நீக்கிவிடும்படி உத்தரவிடுகின்றேன்."

இக்கூட்டத்துக்கு வண. பிதா குருசுவாமி அவர்கள் தலைமைவகித்தார்கள்; டென்மார்க்கிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்துள்ள மீன்பிடி ஆராய்ச்சி நிபுணர்களும் இலங்கை மீன்பிடிப்பகுதி அதிகாரியும் மேடையில்வீற்றிருந்தனர்.

## கொள்ளையடித்த வழக்கு

### 17-ந் திகதி விசாரணை

குதிரைப்பந்தயச் சங்கத்துக்குச் சொந்தமான சுமார் 4 இலட்சம் ரூபாயைக் கொள்ளையடித்த சந்தேகப் பேர்வழிகள்மீது சென்ற வியாழக்கிழமை கொழும்பு நீதிஸ்தலத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

இப் பகற்கொள்ளை ஜனவரி மாதம் 31-ந் திகதி நடைபெற்றது.

இவ் வழக்கில் 6 குற்றச்சாட்டுகள் அடங்கியுள்ளன. இதையொட்டி அரசினர் சார்பாக நூற்றுக்கு மேலான சாட்சிகள் விசாரணை செய்யப்படுவார்கள்.

சைமன் டி. சில்வா, ஜெய்சிங்க, கில்பேட் டயாஸ், லேவிஸ், எம். கே. உவில்ஸன், அல்பேட் டி. சில்வா என்ற 5 எதிரிகளையும் விசாரணைக் கைதிகளாக இருக்குமாறு நீதிபதி ஸ்ரீஸ்கந்தராஜா உத்தரவு பிறப்பித்தார். விசாரணை 17-3-49-ல் மீண்டும் ஆரம்பமாகும்.

## வயதேறியவர்களுக்குக் கல்விச்சாலை

வயதுஏற்றத்தின் காரணமாக கல்லூரிகளிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்கு ஆங்கிலம் கற்பிப்பதற்காக இக் கல்விச்சாலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்போது ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவர்கள் உளர். யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக் கோவில் கட்டளைக்குருவாகிய வண. சுவாமி பி. ரி. யேம்ஸ் ஓ. எம். ஐ. அவர்களது முகாமையின்கீழ் இது நடத்தப்பட்டு வருகிறது.

பாடசாலைச் சம்பளம் மாதாந்தம் கட்டப்பட வேண்டியது. வகுப்புகள்பற்றிய சகல விபரங்களும் அறியவிரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதுக:
Rev. Fr. P. T. James O. M. I.
St. Mary's Cathedral Jaffna.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 4319**

சண்டிருப்பாய்,
பேரம்பலம்–சண்முகம்
வழக்காளி.

நெடுந்தீவு மத்தி,
கணபதிப்பிள்ளை சாமுவேல் குமாரசுவாமி
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 4319-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1949-ம் ஆண்டு மார்ச் (பங்குனி) மீ 26-ம் வ (26–3–49) சனிக்கிழமை முற்பகல் $9\frac{1}{2}$ மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை:**— முதல் வட்டி ரூபாய் 1477–50ம், இதில் ரூபாய் 1250–00க்கு 12–3–48 திகதி தொடக்கம் 25–5–48 திகதி வரைக்குப் 100க்கு 18 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவும்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி நெடுந்தீவுக் கோவிற்பற்று நெடுந்தீவு மத்தியிறை "சின்ன தோப்பு" உறுதிப்படி நிலப்பரப்பு 15; ஆனல் ஆட்சிப்படியும் அளவுப்படியும் நிலப்பரப்பு 35ம், பனைகளும், கல்வீடும், மற்றும் கட்டிடங்களும். எல்லை: கிழக்கும் வடக்கும் சண்முகம் பெண் சேதப்பிள்ளைக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம்; மேற்கு ஸ்ரீபின் பெண் மாரியாய்க்கும் பங்காளருக்குமுரிய ஆதனம்; தெற்கு றேட்டு. இவ்வெல்லைக் குட்பட்டவைகளிற் சொரியலாய் நாலில் மூன்று ($\frac{3}{4}$) பங்கும் சித்தமான கல் வீடும் மற்றும் கட்டிடங்களும்.

**குறிப்பு:**— வேறு விபரம் அறிய விரும்புவோர் மானிப்பாய் பிறக்கிறாசியார் சி. இராசேந்திரன் அவர்களிடம் அறியவும்.

சின்னத்தம்பி-சங்கரப்பிள்ளை
Commissioner &
Licensed Auctioneer
தெல்லிப்பழை
19-2-49 [3633]

## வித்தியாதிபதி

### வெளிநாட்டிலிருந்து வருவார்

இலங்கைக் கல்விப் பகுதியின் வித்தியாதிபதிப்பதவிக்கு வெளிநாட்டிலிருந்து ஒரு நிபுணரை வரவழைப்பதற்கு அரசாங்கம் உத்தேசித்திருக்கின்றது. கல்வித்துறையில் நிறைந்த அனுபவம் வாய்ந்த ஒருவரைத் தெரிந்தெடுப்பதற்கு முயற்சிகள் நடைபெற்று வருவதாக அறியக்கிடக்கின்றது

## கண்டி உபதேர்தல் எதிரொலி

### 9-பேர்கள்மீது நடவடிக்கை

கண்டி உபதேர்தல் ஆட்சேபனை மனுசம்பந்தமாய்; ஒன்பது பேர்கள்மீது இலஞ்ச ஊழல் அல்லது சட்டவிரோதமான நடத்தைகளுக்காக நடவடிக்கை எடுக்கும்படி ஏன் பிரதம தேசாதிபதிக்கு அறிவிக்கக் கூடாதென்பதற்குக் காரணங்கள் கூறுமாறு கோரி பிறப்பிக்கப்பட்ட அறிவித்தல்கள் சம்பந்தமான விசாரணை நீதியரசர் திரு. நாகலிங்கம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

திருவாளர்கள் விக்ரமரத்ன, வில்சன ரத்னயகா, லயனல் கூரே, எல். பி. வாகிரல, ரோலன் ஜெயசேகரா, ஜே. நிசங்கா, பெர்ணண்டஸ், பிரட் டீ. சில்வா ஆதியோர்மீது பிறப்பிக்கப்பட்ட அறிவித்தல்களின் விசாரணை நடைபெற்று வழக்கு 17-ந் திகதிக்குத் தவணையிடப்பட்டது.

கண்டியிலுள்ள கிஸ்லி அச்சுக்கூடம் மனேஜர்மீது பிறப்பிக்கப்பட்ட அறிவித்தல் தவறானபேரிடம் செலுத்தப்பட்டதால், புதிய அறிவித்தலொன்றை குறித்தமனேஜருக்குப் பிறப்பிக்கும்படி நீதியரசர் உத்தரவிட்டார்.

# கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 4250**

வண்மேற்கு
வயிரவி வயிரமுத்து
வழக்காளி

புன்மேற்கு
கார்த்திகேசு நாகலிங்கமும்
பெண் சிவக்கொழுந்துவும்
எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் 4250–ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1949 ௵ பங்குனி மீ 19-ம் வ சனிக்கிழமை முற்பகல 10 மணிதொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலதகில விற்கப்படும்.

**தீர்வைத்தொகை:**— முதல் வட்டி ரூபா 2236-75ம் இதற்குத் தீர்வைத்திகதி தொடக்கம் 100-க்கு 5 வீத வட்டியும் ஷை 24-2-48 முதல் 18-6-48 வரை ரூ. 2000-க்கு 8 வீத வட்டியும்

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவு கோயிற்பற்று புங்குடுதீவு மேற்கு, இறை குறம்பத்தனை நிலப்பரப்பு 9-ம் குழி $1\frac{1}{8}$-ம் வீடுகளும் பனைகளும் எல்லை: கிழக்கு, பொன்னம்பலம் பெண் ஒகஸ்றுக்கும் மறுபேருக்கும் வடக்கு இராமன் மகன் சின்னக்குட்டிக்குரிய ஆதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு அருணாசலம் பெண் பொன்னம்மாவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் இதடங்கலும்

S. Ambalavanar
கொம்மிஷனர்

புங்குடுதீவு
1949௵ மாசிமீ 14உ [3616-ii]

# கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 4313**

சண்டிருப்பாய்
பேரம்பலம் சண்முகம்
வழக்காளி

நெடுந்தீவு மத்தி
1. கணபதிப்பிள்ளை சாமுவேல் குமாரசுவாமி
2. பெண் கிறேஸ் ஞானரத்தினம்

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 4313-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1949-ம் ஆண்டு மார்ச்சு (பங்குனி) மாதம் 26-ந் திகதி (26-3-49) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**— முதல் வட்டி ரூபாய் 669-99ம் இதில் ரூபாய் 468-20க்கு 11-3-48 திகதி தொடக்கம் 25-5-48 திகதி வரைக்கும் 100க்கு 18 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும். கோட்டுச் செலவு ரூபாய் 117-40 சதம்.

### காணியின் விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி நெடுந்தீவுக் கோவிற்பற்று நெடுந்தீவு மத்தியிறை "சின்னதோப்பு" உறுதிப்படி நிலப்பரப்பு 15. ஆனல் அளவின்படியும் ஆட்சிப்படியும் நிலப்பரப்பு முப்பத்தைந்து (35)ம் பனைகளும் கல்வீடும் மற்றும் வீடுகளும். எல்லை; கிழக்கும் வடக்கும் சண்முகம் பெண் சேதுப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு, ஸ்ரீபின் பெண் மாரியாயின் உரிமைக்காரருக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். தெற்கு றேட்டு. இதில் சொரியலாய் நாலில் மூன்று பங்கும், ஆனல் கல்வீடும் மற்றும் கட்டிடங்களும் சித்தமாகவும்.

**குறிப்பு:**— வேறு விபரம் அறிய விரும்புவோர் மானிப்பாய் பிறக்கிராசியார் சி. இராசேந்திரன் அவர்களிடம் அறியவும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner &
Licensed Auctioneer
தெல்லிப்பழை
19.2.1949 [3632]


பூகோளத்தொடர்

# பூமிசாஸ்திரம்

நான்காம், ஐந்தாம் புத்தகங்கள்

★


பலகாலம் ஆசிரியராயிருந்து அனுபவம்பெற்ற திரு. வே. மு. சபாரத்தினசிங்கம், B. A., அவர்களால் 4-ம், 5-ம் வகுப்புகளுக்கென, பாடத்திட்டத்துக்கமையச் சிறந்த முறையில் எழுதி வெளியிடப்பட்டிருக்கின்றன.

4-ம் புத்தகம் — சதம் 80
5-ம் புத்தகம் — ரூ. 1-00
தபாற் செலவு வேறு

★

சுன்னுகம் : தனலக்குமி புத்தகசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மருமக்களே!**

**வணக்கம்:** இடையிடையே மருமக்களுக்குப் பாட சம்பந்தமான விஷயங்கள் அறிவிப்பது உகந்ததெனச் சில ஆசிரியர்கள் எனக்குக் கடிதங்கள் எழுதியிருக்கின்றார்கள். ஆகையாற் சரித்திரம், பூமிசாஸ்திரம், இலக்கணம் முதலிய பாடங்களைத் தனித்தனியாகக் கொண்ட சில குறிப்புகள் வாராவாரம் தர யோசித்திருக்கிறேன்.

பல வருஷங்களுக்கு முன் மனிதர் செய்த கல்லாயுதங்கள் திருத்த மற்றனவா யிருந்தன. ஆகையால் அக்காலத்தைப் **பழைய கற்காலம்** என்று சரித்திர வல்லுநர் கூறுவார்கள். அக்காலத்திலே மனிதர் வேட்டையாடியே சீவனம் செய்து வந்தார்கள். இறைச்சியைப் பச்சையாகவோ அல்லது தேனுடன் கலந்தோ புசித்தார்கள். தோல்களைக்கொண்ட உடைகளைப் பெண்கள் அணிந்து வந்தார்கள்.

பழைய கற்காலத்துக்குப் பல ஆண்டுகளுக்குப்பின்னர் **புதிய கற்காலம்** தொடங்கிற்று. அக்காலத்திலும் கல்லாயுதங்களைத்தான் உபயோகித்து வந்தனர். ஆனால் கல்லாயுதங்களைச் செப்பமாகவும் திறமையாகவும் செய்தார்கள். அக்காலத்தில்தான் மனிதர் நெருப்பு மூட்டவும் கற்றறிந்தனர். நெருப்பின் உதவியால் சட்டிபானை வனையவும் பழகிக் கொண்டார்கள்.

புதிய கற்காலத்தில் மனிதர் பயிரிடவும் அறிந்தனர். அப்பு, வில்லு, கோடரி, கத்தி முதலிய ஆயுதங்களையும் செய்தார்கள். எங்கள் நாடாகிய இலங்கையிலும் கற்காலம் இருந்திருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். கண்டெடுக்கப்பட்ட கல்லாயுதங்களாலும் கற்சாமான்களாலும் இலங்கையிலே இருந்திருக்கலாம் என்றும் சொல்கிறார்கள்.

புதியகற்காலம் முடியுமுன்னரே சில தேசங்களில் **தங்கம்** என்னும் உலோகத்தைக்கண்டு பிடித்திருக்கிறார்கள். இரண்டாவதாக **செம்பு** என்னும் உலோகத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள். செம்பு கடினமான உலோகமல்லாதபடியால், இக்குறையைத் தீர்க்க முயற்சிக்கையில் **தகரம்** என்னும் உலோகத்தைக்கண்டு பிடித்தனர் மனிதர். பின் செம்பையும் தகரத்தையும் கலந்து **வெண்கலம்** என்னும் கலப்பு லோகத்தையும் செய்ய அறிந்தார்கள். இவைகளையே புராதன **எகிப்தியர்** உபயோகித்தனர். ஆனால் இலங்கையில் செப்பாயுதமோ, வெண்கல ஆயுதமோ கண்டெடுக்கப்படவில்லை.

**இரும்பு** என்னும் உலோகத்தை 3500 வருஷங்களுக்கு முன்னர், ஆசியா மைனர் என்னும் தேசத்திலிருந்த **ஹிற்றைட்ஸ்** என்னும் சாதியாரே முதன்முதலாக உபயோகப்படுத்தினரென்று சரித்திரம் சொல்கின்றது. இதன்பின்னரே **அசீரியரும் எகிப்தியரும் கிரேக்கரும்** இதைப்பற்றி அறிந்தனர்.

கற்கால மனிதர் நாகரீகத்திற் குறைந்தவர்கள். மிருகங்களைப்போலப் பகலில் வேட்டையாடி இரவில் நித்திரை செய்து வந்தார்கள். புதிய கற்காலம் முடியுமுன்னர் மனிதரிற் சிலர் வேறு முயற்சிகளும் செய்தனர். மீன்பிடித்து உணவாகப் புசித்தார்கள். மந்தை மேய்ப்போரானார்கள் பயிரிடுவோரானார்கள்.

மனிதர் கமத்தொழிலில் ஈடுபட்டபின்னர்தான் நாகரீகம் மேம்பட்டது. சென்ற இரு நூற்றாண்டுகளாகப் பல வித யந்திரங்களைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். மனிதரின் வேலைகளிற் பலவற்றை இயந்திரங்களே செய்வதால் கூடிய ஓய்வுநேரங்கிடைத்தது மனிதருக்கு. ஆகையால் முன்னேற்றத்திற்குச் சுலபமாயிருந்தது.

**ம**ருமக்களே, சுதந்திரப் போட்டி சம்பந்தமாகப் பல வியாசங்கள் கிடைத்திருக்கின்றன. ஆறுதற்பரிசு பெறுதற்குத் தகுதியுடையன ஒன்றுமேயில்லை. மருமக்கள் எல்லோரும் ஏதோ தாங்கள் நினைத்தவாறு எழுதித்தள்ளியிருக்கிறார்கள். அடுத்தவாரம் வியாசம் எப்படியிருக்கவேண்டுமென்று காண்பிப்பதற்காகதிரு.டி.எஸ். சேனநாயகாவைப்பற்றி ஒரு வியாசம் நானே எழுதுவேன். அதையும்வாசித்துப்பாருங்கள் என்றாலும், நீங்கள் எழுதிய வியாசங்களிற் காணப்படும் சிலதுணுக்குகளை அடுத்த வாரம், பிரசுரிப்பேன். அதிற் சிலவற்றை வாசித்தால் எனக்கே —வயதுசென்று கிழவனான எனக்கே— பற்கள் இல்லாதஎனக்கே—சிரிப்புவருகின்றது. மருமக்களே, அவற்றை அடுத்தவாரம் பார்த்து வாசியுங்கள். வாசித்தபின்பு சிரியுங்கள். **வணக்கம்.**



## மருமக்கள்

மே.258: விஸ்வநாதசர்மா நாகேஸ்வர சர்மா, C/O. சு. சிவசுப்பிரமணிய ஐயர், கந்தரோடை; மே.259: சிவசுப்பிரமணிய ஐயர் கனகசபாபதி ஐயர், கந்தரோடை, கீ.260: வயித்திலிங்கம் சுந்தரலிங்கம், பழைய றேயில் வீடு, லேக் ரோட், மட்டக்களப்பு.

## கவனிப்பு

வயதுகூடியதன் காரணமாகப் பாலர் பகுதியிலிருந்து நீக்கப்பட்டவர்கள்:

**மே.35. க. தேவராஜா**
**மே. 100. மு. கங்காதேவி**

❋

வயது கூடியதன் காரணமாகக் கீழ்ப்பிரிவிலிருந்து மேற்பிரிவுக்கு மாற்றப்பட்டவர்கள்.

**கீ.13. இ. சற்குணம்**
**கீ.152. த. அமரா[illegible]**

## தெரிந்ததா?

1. குசேல உபாக்கியானம் செய்த புலவரின் பெயர் யாது?
2. சிலுவை யுத்தங்கள் யார் யாருக்கிடையில் நடந்தன?
3. மகாவம்சம் என்பதுயாது?
4. இலங்கைக் கல்வி மந்திரி யார்?
5. அறுசுவை எவை?
6. பனியில் எந்த மாதங்களிற் பாளை வரும்?
7. ஹனிபல் என்பவன் யார்?

### பிறந்ததின வாழ்த்துக்கள்

**6-3-49—12-3-49**

**கீ.10. ச. மகேஸ்வரி கீ.52. செ. தர்மலிங்கம்; மே.59. க. குருநாதன்; மே.189. அ. பூலோகசுந்தரம்; மே.232.பெ.வேலுச்சாமி.**

●

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வார்களாக.

## மாமா பதில்

**ஆ. கணபதிப்பிள்ளை,** மே.12: முதலாம் முறையாக அறிவித்தது என்கைக்கு இன்னும் கிட்டவில்லை. இரண்டாம் அறிவித்தல் கிடைத்தது மருமகனே. நிற்க, உமக்குக் கடிதம் எழுதத் தெரியாதென்று யார் சொன்னது? நன்றாகத்தானே எழுதுகிறீர்! பத்திரிகைச் சுதாதிரத்தைப்பற்றி அறிய ஆவலுண்டானால் 5 சத முத்திரை யனுப்பவும்.

**தி. பஞ்சாட்சரம்,** மே.95: தொடர்கதை நன்கமையாதபடியாற் பிரசுரம் பெறுவது சிரமம். நாவலர் பெருமான் இம்முறை பிரசுரமாகிறது.

**இ. ஐயாத்துரை,** மே 254: தோழர் ஸ்டாலினைப்பற்றி ஏதோ எல்லாம் எழுதுகிறீர் மருமகனே. படிக்கும் பிள்ளைக்கு இவைகளெல்லாம் இப்பொழுது கெட்டவை.

**ஜோ. ஜெயராஜா,** மே 245: உமது கட்டுரை கிடைத்தது. மிகவும் நன்றாயிருக்கிறது.

**அ. சுப்பிரமணியம்,** மே 20: கடிதம் எழுதும்போது உமது இலக்கத்தையும் குறித்தனுப்ப வேண்டும். பதில் தபால் மூலம் உமக்குக் கிடைக்கும்.

**க. தேவராஜா,** மே.35: உமக்கு 20 வயதிற்கு மேலாகிறபடியால் பாலர் பகுதி அங்கத்துவத்தை இழக்கிறீர். ஆனால் தொடர்ந்து கட்டுரைகள் எழுதி ஆசிரியர், ஈழகேசரி சுன்னாகம். என்ற விலாசத்திற்கனுப்பவும். உகந்ததாகவிருந்தாற் பிரசுரம் பெறுந்தானே! சுபம்.

**பூ. சதாசிவரத்தினம்,** மே 256: 'நமது கிராமம்' என்ற வெண்பாவில் உமது கிராமத்தைப்பற்றி ஒன்றுமில்லையே மருமகனே.

**சி. சரவணபவான்,** மே.267: **'காலைக்காட்சி'** அச்சேறாததற்குக் காரணம் என்னைக் கேட்பதிற் பயனில்லை மருமகனே. உமக்குத்தானே நன்கு தெரிய வேண்டுமே. பேனா நண்பர் ஆரம்பிப்பது இப்பொழுது [illegible] மற்றும் [illegible] எழுதியனுப்பவும்.

## ஆறுமுக நாவலர் பெருமான்

**தி. பஞ்சாட்சரம் மே.95**

சைவமும் தமிழும் தன்னிலை குன்றி மக்களெல்லாம் அறியாமையில் மூழ்கி உத்தியோகப்பதவிகளுக்காகச் சைவ சமயத்தையும், தமிழையும் விட்டு மறந்துபோகும் சமயத்தில் நாவலர் பெருமான கடவுளின் அருளினால் அவதரித்தார்.

நாவலர் என்பது நாவின் வலத்தையுடைய பெருந்தகையாரென விரியும். இருவகைப் புலமையும் ஒருங்கே அமைந்த வள்ளல் நாவலர்பெருமானே!

நாவலர்பெருமான் பல நூல்களைக் கற்று உண்மை உணர்ந்தார் மட்டுமல்ல, கற்றியாங்கு நிற்றலெனும் திறனுடையார் மட்டுமல்ல, உலக மக்களுக்கும் தானறிந்த உண்மை நிலையை உணர்த்தி வைத்த பெரியாராவார்.

நல்லைநக ராறுமுக
நாவலர் பிறந்திலரேற்
சொல்லுதமி ழெங்கே
சுருதியெங்கே—யெல்லவரு
மேத்துபுரா ணாகமங்க
ளெங்கேப்ர சங்கமெங்கே
யாத்தனறி வெங்கே யறை.

இது உண்மை. இவர் ஒருவரன்றோ எங்களின் சைவ சமயத்தையும் தமிழையும் காக்க வந்த பெருமான். சைவ சித்தாந்தம் பல உண்மைக் கொள்கைகளைத் தன்னுள் அடக்கிக்கொண்டு மேலும் பரந்து விரிந்து கிடக்குமோர் சமரச ஞானக் கடலாக விளங்குகின்றது என்று உண்மைப்படுத்திய சைவப் பெருந்தகையாளர் நாவலரொருவரே.

அக்கால மக்களிடையே சைவசமய உணர்ச்சி கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது. மக்களெல்லோரும் சமய ஞான பண்டிதர்களாக எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்ட கருணையாளர்களாக, செந்நெறியோம்பும் தொண்டாற்றிய செல்வர்களாக விளங்கவைத்த பெருமை நாவலர்பெருமானுக்கே யுரியது.

பிழைகளைக்கண்டவிடத்தில் அஞ்சாது கண்டனம் செய்வதிற நாவலர் பின்நின்றாரல்லர். சைவ சமயத்தின்மேல் சொல்லொணுக் குற்றங்களைப் பாரித்துத் தூற்றிய பாதிரிமார்களுக்குத் தக்க பதில் இறுத்து அவர்கள் வாயை அடங்கச் செய்தார்.

பணத்துக்காகவும், உத்தியோகத்துக்காகவும் சைவ சமயத்தை விட்டுப் பிற சமயம் பூண்ட ஒவ்வொருவரையும் கண்டித்தார். சைவசமயத்தின் உண்மைக் கொள்கைகளை எடுத்துக் காட்டினார். சைவ சமயத்துக்கு வந்த கேட்டினை நினைந்து நினைந்து நைந்துருகினர். அவற்றுக்காகத் தம் வாழ்நாளெல்லாம் செலவிட்டார். எளிய நடையிற் புத்தகங்களை எழுதிச் சைவ மக்களுக்குப் புத்துயிர் அளித்தார். இதனாலேயே வசனநடை கைவந்த வல்லாரெனப் போற்றப்பட்டார். நாவலரவர்கள் விருமபின பதவிகள் பெற்றிருக்கலாம், பெரும்பொருள் தேடி இருக்கலாம். ஆனால் அவற்றை வெறுத்தார். சைவசமயத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றுவதே தமது கடமையென நினைந்து வாழ்ந்தார். தமிழுக்காக அரும் பாடுபட்டார் என்பதற்கு அவர் எழுதிய கருவி நூல்களும், பல நூல்களுக்கு எழுதிய உரைகளும் சான்று பகரும். இவர் எந்தப் பெரிய காரியந்தனிலும் சொல்லளவில் நிறுத்தவில்லை. செயலிலும் செய்து காட்டியுள்ளார். புலமையுடையோர் நல்லொழுக்கத்திலே நின்றும் தவறியது உண்டு. எனினும் நாவலர் பெருமானே அவரின் புலமைக்கேற்ற நல்லொழுக்கத்தோடு கூடி வாழ்ந்து சைவர்களுக்கு— தமிழ்மக்களுக்கு — ஓர் முன்மாதிரி காட்டினார்.

### பதில்

1. வல்லூர் தேவராஜ பிள்ளை.
2. மகமதியர்—கிறிஸ்தவர்.
3. சிங்கள அரசரின் சரித்திரத்தைக் கூறுவது.
4. திரு. ஈ. ஏ. நுகவெல.
5. இனிப்பு, உறைப்பு, புளிப்பு, கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு.
6. மாசி, பங்குனி.
7. ஆபிரிக்காவின் காதேஜ் நகரின் தலைவன்.

## ஆலயம் தொழுதல்

**இ. மகேஸ்வரசர்மா கீ.164**

உலகினில் ஆறறிவுபடைத்த மனிதப்பிறவியை எடுத்த நாமெல்லோரும் பிறவிப்பயன் அடைவதற்கு ஏதுவாகச் செய்யவேண்டிய முதற் காரியம் ஆலயம் தொழுவதே யாகும்.

கடவுள் எள்ளுக்குள் எண்ணெய்போலவும்தீயிற்சூடுபோலவும், விறகில் தீயைபபோலவும், பாலில் நெய்யைப்போலவும் மறைந்து சர்வவியாபகராய் இருப்பினும் நமது புலனடக்கத்துக்கு ஏற்ற இடம் ஆலயமேயாகும். இதனைக் குறித்தே கடவுளிடம் நேரே பேசிய மெய்யடியார்களாகிய நாயன்மாரே கோவிலில் தரிசனம்செய்துவந்துள்ளார். ஆலயந் தொழுவது அவசியமென்பதை திருநாவுக்கரசு நாயனாரது திருஅங்கமாலை வலியுறுத்துகிறது. இதனைத் தற்கால நவீன நாகரீகத்துள் மூழ்கிய சிலர் "ஆலயம்தொழுவது வேலைமினக்கேடு" என்றும், கடவுள் நம்மனதில் நிறைந்திருக்கிறாரே ஆகையால் கோவிலுக்கேன் போகவேண்டும் என்றும், கல்லிலும் செம்பிலுமோ இருப்பார் எங்கள் கடவுள் என்றும் குதர்க்கம்செய்து நாஸ்திகராகி உண்டு உடுத்துக் கவலையின்றிச் சீவிப்பதே மோட்சமென்று லோகாயதராய்த் திகழ்கின்றார்கள். இவர்களது ஆணவந்தானென்னே? நமது பெரியோராகிய அறுபத்துமூன்று நாயனமாரும், மணிவாசகப்பெருமானும் ஏனைய அடியார்களும் தலங்கடோறும் போய்ப்போய்த் தரிசித்தமை அறிந்தும் அறியார் போலும். அவர்கள்நமக்கு வழிகாட்டியவர்களல்லரா? ஆகவே நாமனைவரும் நமது பெரியோர்களின் வழியைப் பின்பற்றி ஆலயந் தொழுவதை மனஒருப்பாட்டுடன் அவசிய கருமமாகக்கைக் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக் கடிதங்கள்

# நீர்வேலிக் கிராமத்தின் நிலை

நீர்வேலிக் கிராமத்தின் கல்வி நிலை மிகவும் மோசமடைந்து விட்டது. இக்கிராமத்தில் படிக்கக்கூடிய பிள்ளைகள் 1200. ஆனால் நீர்வேலி வடக்கிலுள்ள ஒரு சைவப்பாடசாலையிலும் இரண்டு கிறிஸ்த பாடசாலைகளிலுமாக 500 பிள்ளைகள் வரையிற்றான் படிக்கிறார்கள். ஏனைய ஏறக்குறைய 700 பிள்ளைகள் படிக்கவில்லை.

பலருக்குக் கையெழுத்துப்போடக்கூடத் தெரியாது. சாதாரண சிறு கணக்குக்கூடப் பார்க்கத் தெரியாது. இக்கிராமப் பிள்ளைகள் சைவப்பிள்ளைகள், அதிக தூரமிருந்து சைவப் பாடசாலைக்கு வரமுடியாது. அல்லாமலும் கொடிய வெய்யிற்காலமும் மழைகாலமும் சிறு குழந்தைகளின் வரவுக்குத் தடையாக உள்ளது. அதிகமானோர் கமக்காரர்கள். கல்வியறிவின்மையால் முரட்டுத்தனமே அதிகம். அதிகக் குடிவெறியும் பரவியுள்ளது. திருவிழாக்கள் முதலியவற்றிற்கு அநியாயமாகச் செலவிடுவார்கள். இங்குள்ள இரண்டு கிறீஸ்த ஆரம்ப பாடசாலைகளில் ஹரிஜனப் பிள்ளைகளே படிக்கிறார்கள். இந்த நிலைமையில் நீர்வேலியில் உள்ள கல்விநிலையை ஆராயாமல் இருக்க முடியாது.

இக்கிராமத்தில் மாணவர்களிடையே சமய அறிவும் அபிமானமும் குறைந்துவிட்டது. சமயக் கல்வி அடியோடு இல்லை. இங்குள்ள மூன்று ஆலயங்களில் வெள்ளிக்கிழமைதோறும் மாணவர்கள் சிவநாமம் படிப்பது வழக்கம். இப்பொழுது அந்த வழக்கம் அழிந்துவிட்டது. மாணவர்கள் நாஸ்திகம் பேசத் தலைப்பட்டுவிட்டனர். இங்குள்ள பாடசாலையிற் சமயக் கல்வி போதிப்பதைக் கைவிட்டதுதான் இதற்குக் காரணமாகலாம்.

இங்குள்ள பாடசாலையிற் கூட்டுக் கல்வியிருப்பதும் ஒழுக்கக்கேட்டுக்கு ஒரு காரணமாகத் தெரிகிறது. மாணவ மாணவிகள் காதல் கடிதங்கள் எழுதிக்கொண்டே இருக்கிறார்கள். சில ஆசிரியர்களது நடத்தைகூட வெறுக்கக் கூடியதாக இருக்கிறது. மாணவர்களது பேச்சுவார்த்தைகள் தூய்மையில்லை. சிலநேரங்களிற் பாடசாலை மானேஜரும் வகுப்புக்குச் சென்று படிப்பிக்கிறார். பண வருவாய்க்காக நிர்வாகம் நடைபெறுவது மிகவும் வருந்தத்தக்கது. மாணவ மாணவிகளின் பழக்க வழக்க ஒழுக்கம் காப்பாற்றப்படாவிட்டால் எதிர்காலம் நாசமாகிவிடும். கூட்டுக் கல்வியை அவசியம் நீக்கவேண்டும் என்பது எமது அபிப்பிராயம்.

மாணவர்களது கல்வித் தராதரம் பூச்சியமாகிவிட்டது. நல்ல படிப்பித்தலே கிடையாது. வேறு பாடசாலை மாணவர்களது படிப்பின் தராதரத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இவ்விஷயம் தெளிவாகத் தெரிகிறது. இப்பாடசாலை மாணவர்களை ஏனைய பாடசாலைகளிற் சேர்க்கும்போது இரண்டு அல்லது ஒரு வகுப்பு இறக்கியே சேர்க்கப்படுகிறது. நீர்வேலிக் கிராமப் பிள்ளைகள் நல்ல மூளைசாலிகளாகவும் விவேகிகளாகவும் இருந்தும் நல்ல படிப்பு இன்மையால் முன்னேற்றம் அடையவில்லை. இந்த அபிப்பிராயத்தை எவரும் மறுக்க முடியாது. இக்கிராமத்திலுள்ள சில புத்தியுள்ள பெற்றோர்கள்-பொருளாதாரத் தகுதியுடையோர் தங்கள் பிள்ளைகளை வெளியிடங்களுக்கு அனுப்பிப் படிப்பிப்பது ஒரு ஆத்தாட்சியாகும். சில பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை வெளியிடங்களுக்கு அனுப்பும்போது ஏனைய வறிய பிள்ளைகள் உள்ளூர்ப் பாடசாலையிலேயே படிக்கவேண்டும் என்ப புத்தி புகட்டுவது சுயநலமல்லவா? இங்குள்ள பாடசாலையில் சராசரிக்காகப் பிள்ளைகளைப் படிப்பிக்கிறார்களேயல்லாமல் உண்மையாகப் பிள்ளைகளின் நலனுக்காகப் படிப்பிக்கவில்லை. இதற்கும் பல அத்தாட்சிகள் உண்டு. ஏனைய கிராமங்களிற் பலர் படித்து உத்தியோகம் பார்க்கிறார்கள். இக்கிராமத்தில் உத்தியோகஸ்தர்கள் மிகக் குறைவு. படிப்புள்ளவர்களும் குறைவு. அதிகமான பிள்ளைகள் ஆரம்ப வகுப்புக்களுடன் நின்றுவிடுகிறார்கள். ஏனைய கிராமங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நீர்வேலிக் கிராமம் மிகவும் பிற்போக்காகவே காணப்படுகிறது.

கிறீஸ்த பாடசாலைகள் இரண்டும் ஆரம்ப வகுப்புக்களே உடையன. ஹரிஜனப் பிள்ளைகள் இங்கு ஆரம்ப வகுப்புக்களைப் படித்துவிட்டு மேல்வகுப்புப் படிக்க வசதி இன்மையால் நின்றுவிடுகிறார்கள். இப்பிள்ளைகள் மற்ற கிராமங்களுக்கு மேல் வகுப்புக்களுக்காக நடந்து அலைகிறார்கள். இங்குள்ள சைவப்பாடசாலையில் ஹரிஜனங்களை அனுமதிப்பதில்லை. ஹரிஜனசமூகம் திருந்தாமல் பிற்போக்கடைவதற்கு இதுவும் ஒரு காரணம். ஹரிஜனங்கள் கல்வி கற்க வேண்டாமா? இதனாற்றான் ஹரிஜனர் நீர்வேலியில் மதம் மாறுகிறார்கள். தாழ்த்தப்பட்ட சமூகத்திடையே கிறீஸ்த மதம் பரவுகிறது. சைவப் பாடசாலையில் இவர்களை அனுமதியாமையால் சைவக் கல்வி தாழ்த்தப்பட்டவரிடையே இல்லாமல் போகிறது.

நீர்வேலிவடக்கிலேயே குறித்த மூன்று பாடசாலைகளும் இருக்கின்றன. தெற்கில் உள்ள பிள்ளைகள் அதிகதூரம் நடந்துதான் பாடசாலைக்குப் போகவேண்டும். கோடைகாலத்தில் தார் சூட்டினாலும் மாரிகாலத்தில் மழைவெள்ளத்தினாலும் பாலர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். இதனால் பிள்ளைகளது வரவு குறைகிறது. தெற்கிலேயே தாழ்த்தப்பட்ட பிள்ளைகளும் அதிகம். ஆகையால் தெற்கில் ஊரவர்கள் ஒரு சைவ ஆரம்ப பாடசாலையைக் கட்டவேண்டும். அல்லது அரசாங்கமாகுதல் ஒரு பாடசாலையைக் கட்டவேண்டும்.

கனம் கல்விப்பகுதி மந்திரியார் அவர்கட்குக் குறித்த விஷயங்கள் எல்லாம் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. நீர்வேலிக் கிராமத்தில் ஒரு கல்வி விசாரணை நடைபெறக்கூடும். கனம், கல்வி மந்திரியார் அவர்களும் நீர்வேலிக் கிராமத்துக்கு வரக்கூடும். நீர்வேலிக் கல்வி நிலைமைபற்றி ஏறக்குறைய 15 வருடகாலம்வரையில் உள்ள புள்ளிவிபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் நீர்வேலிக் கிராமம் திருந்தி முன்னேற்றம் அடையவேண்டுமானால் ஹரிஜனரும் வறியவர்களும் முற்போக்கானவர்களாக வேண்டுமானால் கல்வி நிலைமை அவசியம் சீர்திருந்த வேண்டும் என்பது நமது பணிவான அபிப்பிராயம். இக்கிராமம் சிவசங்கர பண்டிதர், சிவப்பிரகாச பண்டிதர், பீதாம்பரப் புலவர் போன்ற பல படிப்பாளிகள் வாழ்ந்த இடம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் போன்ற மகான்கள் இடையிடையே தங்கிய இடம். இக்கிராமம அபிவிருத்தியடைய வேண்டுமென்பதே எமதுபேரவா.

சி. க. வேலாயுதபிள்ளை
நீர்வேலி, 1-3-49

## இசை அரங்கு

சென்ற (27-2-49) ஞாயிற்கிழமை வெளியாகிய தங்கள் பத்திரிகையில் இசை அரங்கு என்ற விமர்சனத்தைப் படித்தேன். இசைத் தமிழ் நிலைய ஆதரவில் அன்று நடைபெற்ற நிகழ்ச்சிகட்கும், அந்த விமர்சனத்திற்கும் பேதம் காணப்படுகிறது. முதலாவதாக, நீர்வேலி நடராசனின் கச்சேரியை எடுத்துக்கொள்வோம். பாடகரின் லயஞானக்குறைவையோ அல்லது ஸ்சுருதி சுத்தமின்மையையோ குறிப்பிடாது, இராகபாவத்துடன் பாடியதாக எழுதப்பட்டிருந்தது. பின், மிருதங்கத்தைக் குறித்து எழுதியபோது சுமாராய் இருந்தது என்று கூறப்பட்டது. ஆனால் எந்த ஞானமற்றவரும் அன்று மிருதங்கம் வாசித்தவர் லயத்துடன் சம்பந்தப்படவில்லை என்று தெளிவாகக்கூறுவர். தனி ஆவர்த்தனத்தில்தான், கடம் வாசிக்கப்பட்டதா? அல்லது கச்சேரி முழுவதும் வாசிக்கப்பட்டதா? என்ற விபரத்தை அதை எழுதியவர் அறிந்திலர்போலும்.

இதைவிட மனம் வருந்தக்கூடிய விஷயம் ஸ்ரீமான் தியாகு அவர்களுடைய நூதனக் கச்சேரியின் விமர்சனமே. சிறவர் மாத்திரம் ஆர்வம் பெற்றனரா? அல்லது சபை முழுவதும் பிரமித்ததா? என்பதுதான் சந்தேகம். பெரிய சங்கீத சாகர விற்பன்னரும் சாதிக்கமுடியாத பல்வேறு சுருதி வாத்திய ஓசைகளை ஒருங்கு சேர்த்து வெளியிட்ட பெருமையை இப்படி எழுதுவதா?

சங்கீதபூஷணம்
காங்கேசன்துறை வீதி
வண்ணார்பண்ணை, 1-3-49

## "நாட்டியம்" வேண்டுகோள்

ஸ்ரீ தியாகராஜரின் வாழ்க்கை வரலாற்றினை அதிகார பூர்வத்துடன் நாட்டியம் என்ற கலையாக்கக் கருதிய எமது பத்திரிகைமூலம் வெளியிட விரும்புகின்றேன். ஆராய்ச்சியாளரும், கலைஞர்களும், சங்கீதவிற்பன்னரும் இத்துறையில் எமக்கு உதவி செய்யும்படி வேண்டுகின்றேன்.

இது சம்பந்தமாக விஷயங்கள் அனுப்புவோர் பெயர்கள் வெளியிடப்படுவதுடன், அவர்களுக்குச் சன்மானமும் உதவப்படும்.

ஆர். ரஞ்சன்
ஆசிரியர், நாட்டியம்
49, கதிட்றல்வீதி
சென்னை 6

## எல்லாளன் வள்ளுவரின் நண்பனு?

சென்னையிலிருந்து வெளிவரும் அமுதசுரபிப் பத்திரிகையின் தை மாத இதழில் இலங்கையில் தமிழர் என்ற கட்டுரையில் திரு. கு. அருணசலக் கவுண்டர் அவர்கள் இலங்கையை ஆண்ட தமிழரசனாகிய எல்லாளன் திருவள்ளுவர் நண்பனெனக் குறிப்பிடுகின்றார். இவர் கூற்றுப் பொருந்துமா? என்பதை ஆராய்ந்து முடிபு காணுமாறு இலங்கைச் சரித்திர ஆராய்ச்சியாளர்களை வேண்டிக்கொள்ளுகின்றேன்.

த. யோகநாதன்
பழுகாமம், 3-3-49

## ஆசிரிய தராதரப்பத்திரப் பரீட்சை

தமிழ்ச் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியடைந்து, ஒருபோதும் ஷெ பரீட்சையை எடுக்காதவர்கள் இவ்வருடம் நடக்கவிருக்கும் தமிழ் ஆசிரிய தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவர்கள் ஆகின்றார்கள்.

இலங்கையில் இப்போது நடைமுறையிலிருக்கும் கல்விப் பகுதிப் பிரமாணங்களின்படி ஒவ்வொரு வகுப்பிலும் அவ் வகுப்புக்கெனக் குறிக்கப்பட்ட வயதுக்கு மேற்பட்டவர்கள் பாடசாலையிற் படிக்க முடியாமலிருக்கிறது.

இப்படியாகப் பிரமாணம் வைத்ததின் நோக்கம் என்னவாயிருக்குமென்றால், ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவி ஒவ்வொரு [illegible] திற் சித்தியெய்தாவிட்டால் அவர்கள் அப் பரீட்சையை எடுக்க, அல்லது தொடர்ந்து மேல் வகுப்புகளிற் படிக்கத் தகுதியற்றவர்கள் என்பதே. இது பிரதான நோக்கமாயிருக்க இரண்டு—மூன்று வருஷமாக ஷெ பரீட்சையை எடுத்து ஒரு பகுதியிற் சித்தியெய்தியவர்கட்கு இன்னும் அப் பரீட்சையையெடுக்க உத்தரவு கொடுத்து, ஒருபோதும் இப் பரீட்சையை எடுக்காதவர்களாய், தமிழ் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியெய்தி இருப்போரைப் பரீட்சை எடுக்க உத்தரவு கொடுக்காது—அவர்களுக்குச் சம சந்தர்ப்பம் கொடுக்காது இருப்பது நீதியாகுமா? ஒருகாலமும் ஆசிரிய தராதரப்பத்திரப் பரீட்சைக்குத் தோற்றாதவர்களாய், தமிழ் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியெய்தியிருக்கும் சிலருக்கு இப் பரீட்சையை எடுக்க உத்தரவு கொடுக்கும்படி வித்தியாபகுதியினரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எஸ். முருகேசு
நீர்வேலி, 2-3-49

## யா. ஆ. தி. பா. வி. சங்கப் பரீட்சைப் பாடவிதானங்கள்

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கம் நடாத்தும் பிரவேச பண்டித, பாலபண்டித, பண்டித பரீட்சைகள் சம்பந்தமான பாட விதானங்கள் ஏற்கனவே ஈழகேசரி இதழ்களில் — 12-9-48, 26-9-48, 3-10-48, 31-10-48 — பிரசுரிக்கப்பட்டன. குறித்த இதழ்கள் யாவும் இப்போது செலவாகிவிட்டன. இப் பாடவிதானங்களைக்கொண்ட பிரதிகளை அனுப்புமாறு இக் காரியாலயத்துக்குக் கடிதப் போக்குவரத்துச் செய்துகொவள்தால ஒருவித பிரயோசனமும் ஏற்படாதென்பதைத் தெரிவிக்கின்றோம்.

குறித்த பிரதிகள் கிடைக்கப் பெறுதவர்கள் திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் பிற்பகல் 1 மணிக்கும் 2 மணிக்கும் இடையே இக் காரியாலயத்துக்கு வந்து விரும்பிய பாட விதானங்களைப் பிரதி செய்துகொள்ளலாம்.

பரீட்சைத் தேதி, விண்ணப்பப் பத்திரம் முதலியவற்றிற்கு ஷெ சங்கக் காரியதரிசியிடமே எழுதி அறிந்து கொள்ளவும். —பத்திராதிபர்

## பூசாரி பூதர்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கம் சிறுவர்கள்வரையும் வரிசைக் கிரமத்திற் பட்டதும் படாததுமாகக் கைகளிலே போட்டுக்கொண்டு வருவார். தீர்த்தத்தைத் தீர்த்தமாகவே கொடுப்பார். இந்தப் பங்கீட்டு முறையில் வந்திருந்தோர்களிற் சிலருக்கு திருப்தியீனமும் ஏற்படும். இதுவும் அம்பாளின் கிருபைதானென்று விட்டு வீட்டுக்குச் செல்வர்.

■ முதலாம் வகுப்பிலிருந்து ஆறும் வகுப்புவரையும் ஒவ்வொரு சோதனையிலும் என்னைச் சித்தியடையச் செய்த காளியம்மனுக்குப் பூசை செய்த பூசாரி பூதரைச சந்திக்கலாமென்று அவர் வீட்டுக்குச் சிறிது நாட்களுக்கு முன் சென்றபோது அவர் வீட்டிலில்லை. விசாரித்தபொழுது அவர் பரலோகப்ராப்தியடைந்துவிட்டாரென்று அவர் இளைய மனைவியின் மகளின் மகன் சொன்னான். ஒருவர் இல்லாதபொழுது மேலும் அவரைப்பற்றிப் பேசுவது முறையல்ல. பூசாரி பூதரின் ஆன்மா சாந்தியடைவதாக.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

Testamentary Jurisdiction } No. 1001

In the matter of the Estate of the late Vairamuttu Veluppillai of Chunnakam

*Deceased*

Theivanaippillai widow of Vairamuttu Veluppillai

*Petitioner*

*Vs.*

1. Veluppillai Kathiravelu
2. Veluppillai Tharumalingam *alias* Tharumarajah
3. Veluppillai Muttulingam
4. Parameswari daughter of Veluppillai
5. Veluppillai Balakrishnan all of Chunnakam
6. Vairamuttu Thamotherampillai

*Respondents*

This matter coming on for disposal before R R. Selvadurai, Esqr. District Judge in the presence of Mr. T. Kumaraswamy, Proctor on the part of the petitioner on the 11th day of February 1949 and the affidavit of the petitioner having been read:

It is ordered that the 6th respondent abovenamed be appointed Guardian-ad-litem of the 1st to 5th respondents for the purpose of representing them in this case. And the petitioner be declared entitled to Letters of Administration to the Estate of the deceased abovenamed unless the respondents or any other persons shall appear before this Court on or before the 11th day at March 1949 and show sufficient cause to the contrary. It is further ordered that the 6th respondent do produce the said minors before this Court on the said date.

This 11th day of February 1949.

(Sgd.) **R. R. Selvadurai**
*District Judge.*

[ 3631—ii ].

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

Testamentary Jurisdiction } No 1005

In the matter of the Estate of the late Suppiramaniam Ponnudurai of Chunnakam

*Deceased*

Paruvathapathinipillai widow of Ponnudurai

*Petitioner*

*Vs.*

1. Ratnamani daughter of Ponnudurai
2. Ponnudurai Rajaratnam
3. Ponnudurai Nagaratnam
4. Ratnesweri daughter of Ponnudurai
5. T. S. Mudaliar all of Chunnakam

*Respondents*

This matter coming on for disposal before R R. Selvadurai Esquire, District Judge in the presence of Mr. T. Kumaraswamy, Proctor on the part of the Petitioner on the 18th day of February 1949 and the affidavit of the petitioner having been read:

It is ordered that the 5th respondent abovenamed be appointed Guardian-ad-titem of the 3rd and 4th respondents for the purpose of representing them in this case And the petitioner be declared entitled to Letters of Administration to the Estate of the deceased abovenamed unless the respondents or any other persons shall appear before this Court on or before the 22nd day of March 1949 and show sufficient cause to the contrary. It is further ordered that the 5th respondent do produce the said minors before this Court on the said date.

This 18th day of February 1949

(Sgd.) **R.R. Selvadurai**
District Judge

[ 3630—ii ]

## தென்கோவை
### வீரபத்திரேஸ்வரர் கோயில்

நிகழும் சர்வதாரி வருடம் மாசி மீ 2 (26-2-49) ல் மகா சிவராத்திரியை முன்னிட்டு ஷெ கோவிலில் மாலை 6 மணி தொடக்கம் விசேட அபிஷேகம், பூஜை, திருவிழா, சைவப் பிரசங்கங்களும் சிறப்பாக நடைபெற்றன.

— கடிதம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மலர்ப் பலி

—சொக்கன்—

### தொடர் கதை

## 22

எங்கள் பாடசாலை வாழ்க்கையில் நடந்தவை எத்தனை எத்தனையோ? எல்லாம என் சிந்தனைப் பட்டறையிற் பத்திரமாக இருக்கின்றன. சில வற்றைமட்டும் இங்கு கூறுகிறேன். எல்லாவற்றையும் சொல்ல நேரமுமில்லை. மனமும் அதற்கு இடந்தராது.

நான் எனது சகா மாணவர்களுக்கு எதையுமே ஒளித்து மறைப்பதில்லை. அது என் சுபாவத்துக்கு விரோதமானது. நான் புவனுவின் மேல் கொண்டிருந்த காதல் அவர்களுக்குத் தெரிந்தது ஆச்சரியத்துக்குரிய ஒன்றல்ல.

அவர்கள் என்னைப் பரிகாசம் செய்வார்கள்; என்னுடைய தகுதிகளை மிகைப்படுத்திப் பேசி என் காதலுக்கு உருவேற்றுவார்கள். என்னுடைய தகுதிகளுக்குப் புவனு எவ்வளவோ கீழானவள் என்று கூட அவர்கள் பேசுவதுண்டு.

நான் அந்தவேளைகளிலெல்லாம் மௌனமாக இருப்பேன். ஆனுல் என் மனததில் புவனு மட்டுமல்ல, எந்தப் பெண்ணுமே எனக்கு அடிபணிந்துதான் தீரவேண்டுமென்ற பாவம் இருந்துகொண்டுதான் இருக்கும்.

என் சகாக்கள் சொல்லுவார்கள்: 'நாகராஜன் உனக்கு அழகு இருக்கிறது; கல்வியிருக்கிறது; அந்தஸ்தும் இருக்கிறது. புவனுவோ, அழகு ஒன்றைத் தவிர மற்றைய எல்லாவற்றிலும் உனக்கு மிக மிகத் தாழ்ந்தவள். உன் காதல் விசித்திரமாயிருக்கிறது.''

ஆமாம்! என்னுடைய காதல் விசித்திரமானதுதான்! அவளுடைய ஒரு கடைக்கண் பார்வைக்கு இவை எல்லாம் துச்சமே; என் தகுதி எல்லாம் அதன்முன் குனிந்து கொடுத்துவிட வேண்டியதுதான்!

இந்தக் காதலுக்கு என்ன பெயர்?

நாவல்களில் எத்தனையோ காதலர்களின் போக்கைப் பற்றி நான் வாசித்திருக்கிறேன். இந்தக் குறுகிய மாணவ வாழ்க்கையிலே சில காதற் கோஷ்டிகளைச் சந்தித்துமிருக்கிறேன். அவர்கள் அனுபவத்தைக் கேட்டுமிருக்கிறேன்.

இவற்றுல் நான் அறிந்துகொண்ட விஷயம் ஒன்று உண்டு. அது என்னவென்றுல் 'காதல் வளரவேண்டுமாயின், பயனளிக்கவேண்டுமாயின் காதலர்கள் தங்களைச் சம பங்காளிகளாகக் கருதவேண்டும். ஒருவர் மற்றவரிலும் தாம் உயர்ந்தவர் என்ற மனப்பான்மை கூட வே கூடாது.

ஆனுல் என் காதலோ முற்றிலும் இதற்கு மாறுனது. நான் என்னுற் பணியக்கூடிய அளவு பணிந்து புவனுவின் முன்பு மண்டியிட்டு நிற்கிறேன். அவளோ என்னைச் சர்வநாசம் செய்துவிடுகிறது என்று கங்கணங் கட்டிக்கொண்டு நிற்கிருள். சில சமையங்களிற் கடைக்கணித்துவிட்டுப் பின்பு அலட்சியஞ் செய்கிருள். ஆனுலும் என்னுல் இந்தக் காதலை ஒதுக்கிவிட முடியவில்லையே! புவனுவை வெறுத்துக் தள்ளவும் முடியவில்லையே!

நான் என்னை ஒரு மலராக உவமித்துக் கொண்டேன். புவனு என்னும் வண்டு ரீங்காரம் செய்துகொண்டு எனக்கு மேலாக வட்டமிடுகிறது. நான் ஆவலுடன் என் தலையை நிமிர்த்தும பொழுது அது ஏமாற்றத்தைத் தந்து பறந்துவிடுகிறது.

'புவனு! நீ இரக்கமற்ற ஓர் அரக்கி; இராட்சசி; நீ பெண்ணேயல்ல.' எனக்குக் கோபம் — புவனுவின்மேல்— வந்தது இதுதான் முதல்தடவை

தோன்றிய வேகததிலேயே அந்தக் கோபம் மறைந்ததுதான் ஆச்சரியம்!

இந்தப் பாசம் ஏன்? இது இலலாமலே வாழ்க்கை நடாத்த முடியாதா?

எனக்குச் சந்தேகம் தீரவில்லை. வாழ்க்கையிற் பாசமேயின்றி வாழ முடியாதா? இது எனக்குத் தீராத ஓர் சந்தேகம்!

இந்தச் சந்தேகம் உண்டான சிலநாட்களுக்குப் பின்பு ஒரு கூட்டத்திக்குப் போயிருந்தேன். அதன் பிரசாரகர் பேசியவற்றில் ஒரு குறிப்பு என் சந்தேகத்தைத் தெளிய வைத்துவிட்டது.

பற்றற்றவன் பரமன் ஒருவன்தான். நம்மால் அது முடிந்ததல்ல. பிறப்பும் வாழ்வும் மடிவும் கொண்ட எங்கள் வாழ்க்கையைப் பண்பும் பயனுமுடையதாக, சாந்தியும் சந்துஷ்டியுமுடையதாக ஆக்குவது எது? எங்கள் உதிரத்திலே தன்மான உணர்ச்சியையும் வீரத்தையும் ஊக்குவிப்பது எது? சோர்ந்து கிடக்கும் எங்கள் உள்ளங்களைத் தட்டி எழுப்பி ஊக்கத்தையும் உற்சாகத்தையும் நல்குவது எது? இந்தப்பற்று ஒன்றேயல்லவா?

## 23

"நாகராஜன்! உன் திருவிளையாடல் பெண்களுக்குக் கூடத் தெரிந்துவிட்டது! உன் பாடு யோகந்தான். உன் உதவி ஆசிரியை கட்டுரைகள் எழுதச் சக்தி அற்றவளென்றுலும் உனக்கு எழுதும் சக்தியை மட்டும் தருவாள் என்ற நம்பிக்கைமட்டும் எனக்குண்டு'' என்று இராஜலிங்கம் பேச்சைத் தொடங்கினுன்.

"சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிடாதே நாகராஜன்! உன் சக்தியையெல்லாம் பிரயோகித்து அவளை ஓர் சிறந்த எழுத்தாளியாகமட்டும் ஆக்கிவிட்டாயானுல் பிற்காலத்தில்...?'' என்றுன் முருகானந்தன்.

இந்தப் பரிகாசங்களைக் கேட்க எனக்கு ஆனந்தமாகத்தான் இருக்கிறது. ஆனுல் வெளிக்காட்டினுல் மானம் போய்விடுமே! நான் பேசாமல் இருந்தேன்.

இந்தப் பரிகாசங்கள் உள்ளத்தைத் தாக்கா. முகத்தை மட்டும் தாக்கிக் கறுக்கச்செய்துவிடும்! என் முகமும் கறுத்துப்போயிற்று!

"ஆஹா! கல்லிலிருந்து நார் உரிப்பது சாத்தியமற்றது என்று சொல்லுவார்கள் அந்தச் சாத்தியமற்ற விஷயம் கூடச் சாத்தியமான விஷயமாகப் போய்விடும் புவனு எழுத்தாளி ஆகமட்டும் மாறினுல்'' என்று பரிகாசத்தின் எல்லைக்கோட்டையே மிதித்துவிட்டான் வரதராஜன்.

"சாத்தியமற்றது என்று எதைத்தான் சொல்லமுடியும்? நாளைக்கே புவனு என்னிலும் பார்க்கச் சிறந்த கட்டுரையாளியாக மாறினுலும் ஆச்சரியமில்லை'' என்று நான் சொன்னேன்.

"ஆமாம்! நாகராஜன் புவனு என்ற பெயருக்குள் ஒளிந்துகொண்டு எழுதினுல் ஒரு வேளை அந்த ஆச்சரியமான சம்பவம் நிகழவும் கூடும்'' இவை குமாரவேலு சொன்னவை.

எனக்குச் சிரிப்பும் வந்தது; கோபமுமாயிருந்தது. "இன்னும் ஆறுமாதங்களில் நீங்கள் பார்க்கப்போகிறீர்கள் புவனுவின் எழுதும் திறமையை.''

"பந்தயம்'' என்றுன் வரதராஜன்.

"பந்தயம்'' என்றேன் நான்.

"என்ன பந்தயம்'' வரதராஜன் கேள்வி இது.

"என்னஎன்றுலும் சரிதான்'' என்று பதிலிறுத்தேன்.

"உன்னுற் புவனுவை எழுத்தாளியாக ஆக்க முடியாவிட்டால் நீ அவளை மறந்துவிட வேண்டும்.''

இப்பொழுதுதான் என் பந்தயம் எவ்வளவு கஷ்ட சாத்தியமானது என்று தெரிந்தது. ஆனுலும் பிடித்த பிடியை விடாமல் 'சரி' என்றேன்.

நான் வரதராஜனுக்குக் கைபோட்டு உறுதியளித்தபோது இராஜலிங்கம் பொறுப்பாளனுக நின்று எங்கள் கைகளை விடுவித்தான். (மாணவ வாழ்க்கையிலே நீங்கள் பலர் இந்த அனுபவத்தை அடைந்திருப்பீர்கள். மாணவனில் ஒருவன் ஏதாவது பந்தையம் பிடித்துவிட்டால் தன் வலக் கையையும் அவன் எதிராளி தன் வலக் கையையும் கொடுக்க இருவரும் பிடித்துக்கொள்வார்கள். அவர்களின் நம்பிக்கைக்குரிய ஒருவன் பொறுப்பாளியாக நின்று அந்தக் கைகள் இரண்டினிடையிலும் தன் கைகளைக்கொடுத்து விடுவிப்பான். இதை மாணவ பாஷையில் 'வெட்டுதல்' என்று சொல்வார்கள்.)

இந்தச் சம்பவம் எங்கள் மாணவர் தேர்ச்சிச் சங்கத் தேர்தலின்போது நான் பத்திரிகை ஆசிரியராயும் புவனு உதவி ஆசிரியராயும் தெரியப் பட்டதையிட்டு நடந்தது.

நான் என்ன செயவேன்; என்னைக் கண்டதுமே வெடுவெடுத்த முகத்துடன் அலட்சியப்படுத்தும் புவனுவை நான் எப்படி வழிக்குக் கொண்டுவருவது? அவள் பிடிவாதக்காரியாயிற்றே!

என் பொறுப்பைப்பற்றி இப்போதுதான் உணர்ந்தேன். சூதாட்டத்தில் திரௌபதியை வைத்து ஆடித் தோற்ற தருமனின் மனநிலையில் என் மனநிலையுமிருந்தது.

நான் கட்டாயமாக இந்தப் பந்தயத்தில் தோற்றுப்போவேன்! நான் வாக்களித்தபடி புவனுவை மறக்கவேண்டும். இது முடிந்த விஷயமா?

நான இதைப்பற்றி நீள யோசித்தேன். யோசியாமல் என்ன செய்வது? அவள் பிடிவாதத்தை மாற்றி வழிக்குக் கொண்டுவருவதென்பது சாதாரணமான விஷயமா?

ஆனுல் எனக்கு ஒரு நம்பிக்கைமட்டும் இருந்தது. தேர்தலின்போது சிறிது கடுகடுப்பாய்க் காணப்பட்டாலும் தான் உதவி ஆசிரியையாய்த் தெரியப்பட்டபொழுது புவனுவின் முகத்தில் ஏற்பட்ட அந்த மலர்ச்சி!

இந்த நம்பிக்கை அலைகடலில் கிடைத்த சிறு துரும்பு என்றே சொல்லவேண்டும்.

## 24

நான் புவனுவை எழுத்தாளியாகவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தேன். இது புவனுவுக்குத் தெரியாது! உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறதல்லவா? பிள்ளைகளற்ற பாடசாலையிற் படிப்பிக்கும் ஆசிரியன்—பைத்தியகாரன்— நான் என்று நீங்கள் எண்ணுவது எனக்குத் தெரிகிறது!

நான் பத்திரிகாசிரியப் பொறுப்பை அவளிடமே விட்டுவிட்டேன். விஷயங்களைச் சேகரித்துக் கொடுப்பதுதான் எனது வேலை. அவள் எழுதுவாள்; வாசிப்பாள்; தானும் எழுத முயற்சிப்பாள் என்பதே எனது நம்பிக்கை. இதைவிட எப்படித்தான் நான் அவளைச் சிறந்த எழுத்தாளியாக ஆக்குவது?

நண்பர்கள் பரிகசிப்பார்கள். 'இப்பொழுதே நாகராஜனுக்கு உதவிக்கு ஒரு ஆள் கிடைத்துவிட்டது' என்றெல்லாம் ஏளனம் செய்வார்கள்.

எனக்கு இது பெருமையாயிருந்தது! ஆம்! உண்மையிலேயே பெருமையாக விருந்தது. இதனுல் நான் புவனுவுக்கு அதிக கஷ்டம் கொடுத்துவிட்டேன் என்றே சொல்ல வேண்டும்.

இரவு வேளைகளில் என் யன்னல் வழியாகப் பார்த்தாற் பெண்கள் விடுதிச் சாலைகளிற் சகல விளக்குகளும் அணைந்து இருள் சூழ்ந்திருக்கும் வேளையில் புவனுவின் அறையில் மட்டும் வெளிச்சம் தெரிந்து கொண்டிருக்கும். இன்னும் உன்னிப்பாகக் கவனித்தால் புவனு தன் மேசையிலிருந்துகொண்டு தூக்கம் கண்ணை அழுத்த எழுதிக்கொண்டிருப்பாள். பத்திரிகைதான் எழுதுகிருள் என்பது எனக்குத் தெரிந்ததுதான்! ஐயோ! பாவம்!

எனக்கு அனுதாபமாயிருக்கும்; அத்துடன் சந்தோஷமுமாயிருக்குமென்று நான் சொல்லத் தேவையில்லை.

எவள் என்னை அலட்சியஞ் செய்தாளோ, எவள் என் காதலைப் புறக்கணித்தாளோ, அவள் என் கடமையைச்செய்வதில் முனைந்து இரவிலும் கண் விழித்துக்கொண்டிருந்து எழுதுகிருள் என்றுல் எனக்கு அது பெருமைதானே!

இன்றுதான் இந்த நினைவு அவ்வளவு பிழையானது என்று எனக்குத் தெரிகிறது. அவள் தன் கடமையை—உதவிப் பத்திரிகாசிரியர் கடமையைச்—செய்ய நான் என் கடமையைச் செய்கிருள் என்று நினைத்தது எத்தகைய மதியீனம்!

* * *

இரண்டு மாதங்கள் கழிந்தன. அந்த மாதத்தின் மாணவ தேர்ச்சிச் சங்கமும் கூடிற்று. குறிப்புரையின் போது புவனு தன் ராஜினுமாவைப்பற்றி எடுத்துச் சொன்னபொழுது நான் திகைத்துப் போனேன்! ஏன் புவனு ராஜினுமாச் செய்கிருள்? எனக்கு விளங்கவில்லை. உததியோகக் கஷ்டமா? அல்லது என் கீழ் கடமை பார்ப்பது கௌரவ ஈனமென்று நினைக்கிருளா?

என்னுல் ஒன்றும் செய்ய முடியவில்லை. நான் எதிர்பாராதது, என்னுல் நினைக்க முடியாதது நடந்துவிட்டது.

புவனு தன் பதவியை ராஜினுமாச் செய்துவிட்டாள்!

இந்த இரண்டு மாதமாக நான் எதற்காகக் கனவு கண்டுகொண்டிருந்தேனே, எதனுல் சந்தோஷத்தின் அந்ததத்திலே நின்று துள்ளிக் கொதித்தேனே அந்தச் சந்தர்ப்பம் இனி ஏற்படவே ஏற்படாது. நான் என்ன செய்வேன்!

—தொடரும்

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்,


யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை:

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்

தினசரிப் பற்று வரவு:

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்:

கொழும்பிலுள்ள "நாஷனல்'' வங்கியிலும் "இம்பீரியல்'' வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்:

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை

சிறுப்பர்

[3620]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The
# EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, Mar. 6, 1949 | No. 31

# கலைக் களஞ்சியம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுவே Evolution என்ற பரிபாஷைச் சொல்லுக்கு விஞ்ஞான சாத்திரங்களிற் சிறப்பாய் வழங்கப்படும் பொருள். இக்கட்டுரை இதைப்பற்றிப் போதிய அளவு விளக்காமல், இதன் எல்லையைக் கடந்து உலகத்தோற்றக் கொள்கைகளைப் பற்றிக் கூறுகின்றது. பரிணாமம் என்ற சொல், வடமொழித் தர்க்க சாத்திரங்களிலும் சமயசாத்திரங்களிலும் வழங்கப்படும் ஒரு பரிபாஷைப் பிரயோகமாகும். பரிணாம வாதம், சற்காரியவாதம், விவர்த்த வாதம் என்று வடமொழிச் சாத்திரங்களில் உலகத் தோற்றத்தைப் பற்றிய கொள்கைகள் குறிக்கப்படுகின்றன. பரிணாமம் என்ற வடமொழிப் பிரயோகம் நவீன விஞ்ஞான சாத்திரக்கொள்கையைக் குறிப்பிடும் Evolution என்ற பரிபாஷைச் சொல்லுக்குப் பொருந்துமா என்பது கூர்ந்து ஆராயத்தக்கது. இக்கட்டுரையில் Fossil என்ற ஆங்கிலச் சொல். வாசில் என வழங்கப்படுகிறது. இதைத் தமிழிற் புகுத்தவேண்டிய அவசியமில்லை. த-க-சொ-நூலில் இது கல்மாறி என்று கூறப்படுகிறது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட தாவரநூலிலும் இது அப்படியே வழங்கப்படுகிறது. இச்சொல் ஏற்றுக்கொள்ளத்தக்கது. கல்லாய்ச் சமைதல் என்று தமிழிற் கூறும் வழக்கைப் பின்பற்றி Fossil என்பதற்குச் சமைகல் என்று கூறலாமெனத் தோன்றுகிறது.

**கேம்.** சில யந்திரங்களின் அமைப்பிலுள்ள ஒரு கருவி Cam என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும். இதைக் குறிப்பதற்குப் பொருத்தமான தமிழ்ச் சொல் இல்லாமையால், ஆங்கிலச் சொல்லே இக் கட்டுரையில் ஆளப்படுகிறது. Automatic engines - தாமியங்கிப் பொறிகள் எனவும், யந்திரக் கருவிகளில் ஒன்றாகிய Follower தொடரி எனவும் செந்தமிழ்ச் சொற்களால் இவை குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் இக் கட்டுரையின் பிற்பகுதியில் அச்சுயந்திரசாலை அல்லது அச்சுப்பதிப்பகம் என்பதைக் குறிப்பதற்கு அச்சாபீஸ் என்றசொல் புகுத்தப்பட்டிருக்கிறது. இதுபோன்ற அருவருக்கத்தக்க ஆங்கிலத் தமிழ்ப் பிரயோகங்களைத் தென்னிந்தியாவில் வெளியாகும் பல தமிழ்ப் பத்திரிகைகளிற் காண்கிறோம். கலைக் களஞ்சியத்தின் மாதிரிப் பிரதியிலுள்ள முகவுரையிலே 'மானேஜிங் கமிட்டி' என்ற ஆங்கிலச் சொற்கள் தமிழபிமானம் உள்ளவர்களின் கண்ணை உறுத்தும்படியாகச் சென்னைக் கல்வி மந்திரியின் கைச்சாத்துடன் காணப்படுகின்றன. இவ்விதச் சொற்களைக் கலைக்களஞ்சியத்தினின்று களைவது அதன் பதிப்பாளர்களுடைய கடமையென்று வற்புறுத்துவதற்கே இதைச் சுட்டிக்காட்டலாயிற்று.

பரிபாஷைச் சொற்கள் பயிலும் கட்டுரைகளைப் பற்றியாம் இதுகாறும் கூறியதினின்று சிற்சில குறைபாடுகள் காணப்படினும், இவை கலைக் களஞ்சியத்தின் முதற் பகுதி வெளியிடப்படுவதற்கு முன் நீக்கப்படும் என்று நிச்சயமாய் நம்புகிறோம். 'குணநாடிக் குற்றமுநாடி யவற்றுள், மிகைநாடி மிக்க கொளல்" என்ற முறைப்படி காணின், இக் கட்டுரைகள் பாராட்டத் தக்க வகையில் அமைந்துள்ளன என்றே கூறவேண்டும். விளங்கத்தக்கவிதமாக இலகுவான நடையில் இவை எழுதப்பட்டிருக்கின்றன.

* * *

**கலைக்களஞ்சியத்தின்** மாதிரிப் பிரதியில் சமயம், இலக்கியம், சரித்திரம், சங்கீதம், சிற்பம், பொருளாதார சாத்திரம் முதலியவற்றைப் பற்றிச் சில கட்டுரைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. தேவாரம், திருப்பாணாழ்வார், இராமகிருஷ்ண இயக்கம், திருவள்ளுவர், சிலப்பதிகாரம், மகாகவி தண்டி, விபுலாநந்தர், தென்னிந்திய சரித்திர முற்காலம், வீணை, நாகார்ஜான கொண்டா, விவசாயப் பொருளாதார நூல்—என்ற தலைப்புள்ள சில கட்டுரைகளை இங்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இவற்றுட் பெரும்பாலும் முற்றுப்பெறாத கட்டுரைகளாக இருப்பதைக் காண்கிறோம்; சில துண்டுப் பகுதிகளாகவே வெளியிடப்பட்டுள்ளன. இந்த நிலைமையில் இவற்றைப்பற்றித் தக்க மதிப்புரை கூறுவதற்கில்லை. சில கட்டுரைகளிற் குறிப்பிடவேண்டிய முக்கிய பகுதிகள் விடப்பட்டிருக்கின்றன. உதாரணமாக திருவள்ளுவர் என்ற கட்டுரையில், திருவள்ளுவரின் அரசியற் கொள்கைகளைப் பற்றிய பகுதியே தரப்பட்டுள்ளது. அதன் அளவுக்குத்தக்கதாக, திருவள்ளுவரைப் பற்றி ஏனைய பகுதிகள் விரித்துரைக்கப்படுமோ என்பது தெரியவில்லை. தேவாரம் என்ற கட்டுரை அளவில் மிகச் சிறியதாயிருக்கிறது. கட்டுரைகள் கூறும்பொருளின் பெருமைக்குத் தக்கவாறு அவை விரித்தெழுதப்படவேண்டும் என்பது சொல்லாமலே போதரும். தேவாரத்தைப் பற்றிய கட்டுரையில் திருமுறை வகுத்தவரலாறுகூட சரிவரக் கூறப்படவில்லை. சைவாகம உண்மைகளை விளக்கும் பதினான்கு சாத்திரங்களுக்குத் தேவாரமே முதனூல் என்பது போன்ற வாக்கியம் இதிற் காணப்படுகிறது. தேவார காலத்துக்கு முந்திய திருமந்திரத்தில் சைவாகமங்கள் கூறப்படுகின்றன.

**சிலப்பதிகாரத்தைப்** பற்றிய கட்டுரையில் அதன் காலத்தைப்பற்றி ஒரு குறிப்பும் அறிவதற்கில்லை. சுவாமி விபுலாநந்தரைப் பற்றிய கட்டுரை ஒரு புலவர் வரலாறு கூறும் கட்டுரையாக அமையவில்லை. இசைத் தமிழைப் பற்றிய ஒரு கட்டுரையின் பகுதிபோற் காணப்படுகின்றது. இராமகிருஷ்ண இயக்கம் என்ற கட்டுரையில் அவ்வியக்கம் செய்யும் பணிகள் எவை என்று விளக்கப்படவில்லை. நாகார்ஜான கொண்டா என்ற கட்டுரையில் நாகார்ஜானரைப்பற்றி ஒரு வார்த்தையுமில்லை. விவசாயப் பொருளாதார நூல் என்ற கட்டுரையில், விவசாயப் பொருளாதாரத்தைப் பற்றிச் சில கேள்விகளையே காண்கிறோம். வீணை என்ற கட்டுரை மாத்திரம் முழுக்கட்டுரையாய் நன்றாக எழுதப்பட்டுள்ளது. கலைக் களஞ்சியம் பூர்த்தி பெற்று வெளிவரும்போது இங்குக் குறிப்பிட்ட கட்டுரைகளெல்லாஞ் சிறந்த வகையில் அமைந்திருக்குமென்று நம்புகிறோம்.

**கலைக்களஞ்சியத்தில்** தமிழ் மொழியைப் பற்றியும், தமிழ் இலக்கியத்தைப் பற்றியும், தமிழர் சரித்திரம், நாகரிகம் என்பவற்றைப் பற்றியும் சிறந்த கட்டுரைகள் வெளிவரும் என்று தமிழ்நாடு எதிர்பார்க்கிறது. இக்கட்டுரைகள் கலைக்களஞ்சியத்தின் மணிமகுடமாக விளங்கவேண்டும். தமிழ்ப்புலமை நிறைந்த பல அறிஞர்கள் இருக்கும் தமிழ் நாட்டில் வெளியிடப்படும் கலைக்களஞ்சியத்தில் தமிழைப் பற்றிய கட்டுரைகள் சாதாரண தரத்திலிருப்பின், அது தமிழ் மக்கட்குப் பெரும் ஏமாற்றமடைவதற்கிடமாகும். தேவாரம், திருவாசகம், திவ்யப்பிரபந்தம், திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், முதலிய நூல்களின் நயங்களை அறிந்து இன்புறுதற்குக் கலைக்களஞ்சியம் நிலைக்களனாயிருக்க வேண்டும். ஆங்கிலத்திலுள்ள என்சைக்ளோப் பீடியா பிரிட்டானிக்கா என்ற பல்கலைப் பேரகராதியில் ஆங்கில இலக்கியத்தைப்பற்றிய கட்டுரைகள் சிறந்த புலமை வாய்ந்தோரால் எழுதப்பட்டிருக்கிறது போல, கலைக்களஞ்சியத்திலும் தமிழிலக்கியத்தைப் பற்றிய கட்டுரைகள் தமிழில் துறைபோகிய கல்வியாளர்களால் எழுதப்படவேண்டும். ஆங்கிலப் பல்கலைப் பேரகராதியில், கட்டுரையாளர்களின் பெயர் அட்டவணையைக் காணலாம். அதுபோல, கலைக் களஞ்சியத்தின் கட்டுரையாளர்களின் பெயர் அட்டவணையைத் தமிழகம் ண்டு இப்பெரும் முயற்சியில் நம்பிக்கையும் ஊக்கமும் கொள்ளுமாறு செய்யவேண்டும். கலைக் களஞ்சியத்தின் உன்னத நோக்கம் நிறைவேறுதற்குப் பொருட் செல்வர்களுடைய துணையோடு கலைச் செல்வர்களுடைய துணையும் அதிகமாகக் கிடைக்கவேண்டுமென்பது எமது பிரார்த்தனையாகும்.

**குறிப்பு**

முதலாவது கட்டுரை ஃபெப்ருவரி 27 2.49 இதழில் வெளியாகியுள்ளது.

—ப-ர்.

## இட மாற்றம்

வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி (D. R. O.) யின் காரியாலயம் இம்மாதம் 1-ந் திகதி தெடக்கம் மருதனாமடச் சந்திக்கும் உடுவிற் பெண்கள் கல்லூரிக்கும் இடையே தெருவுக்கு அணித்தாகவுள்ள ஒரு கட்டிடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. தற்பொழுது இவரது காரியாலயம் மல்லாகத்திலில்லை.




இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் நா. பொன்னையா அவர்களால் சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில் 1949-ம் ஆ மார்ச் மீ 6உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org